a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

டிசம்பர் 2012 December | இதழ் 263 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION







22 வது ஆண்டு
22nd Year

Growing with the Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்


ஆசிரியரிடமிருந்து | **From the Editor**

# சறுக்கும் அரசியல்

ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட் விவகாரம் கனடிய தேசிய மட்டத்தில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் முக்கியமான பேசுபோருளாகியுள்ளது. களவு அல்லது மோசடி எதுவும் செய்யாமலே பதவி இழக்கும் நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

மேற்கு நாடுகளின் ஜனநாயக விழுமியம் சாதாரண பிரஜைகளுக்கு வழங்கியுள்ள நடைமுறைச் சுதந்திரம் எவ்வகையானது என்பதற்கு ரொறன்ரோ மேயர் மீது தாக்கலான வழக்கும், நீதிபதி வழங்கிய தீர்ப்பும் நல்லதொரு உதாரணம்.

அரசாங்க சபையொன்றுக்குத் தெரிவாகி உறுப்பினராகவிருக்கும் ஒருவர், எந்தெந்த விடயங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எந்தப் பிரேரணையில் வாக்களிக்கலாம்/வாக்களிக்கக்கூடாது என்று சட்ட நடைமுறையுண்டு. இதில் யாருக்கும் விதிவிலக்களிக்கப்பட மாட்டாது.

தம்முடன் சம்பந்தப்பட்ட பிரேரணையொன்றில் அவரும் பங்குபற்றி தமக்குத்தாமே சாதகமாக வாக்களித்தது, 'விருப்பம் கலந்த முரண்பாடு' (conflict of interest) என்கிறது சட்டம். இங்கேதான் றொப் ஃபோர்ட் தவறு செய்தார். தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் மக்களிடம் மன்னிப்புக் கேட்டதிலிருந்து, தமது தவறை அவர் உணர்ந்துள்ளது புரிகிறது.

ஆனாலும், மேயர் பதவி நீக்கம் என்பது நீதிமன்றத் தீர்ப்பாகிவிட்டது. இதன் பிரகாரம் இந்த மாதம் 10ஆம் திகதி பதவிக்கான கடைசி நாள்.

கனடிய சட்டமுறைகளுக்கிணங்கத் தமக்கான நீதிமன்றத் தீரப்பை அவர் மேன்முறையீடு செய்யவுள்ளார். மேன்முறையீட்டு விசாரணைத் தீர்ப்பு வரும்வரை, தம்மைப் பதவி நீக்கும் நீதிமன்றத் தீர்ப்பை இடைநிறுத்தி வைக்குமாறும் (stay order) கேட்கின்றார்.

'இடைநிறுத்த' வேண்டுகோள் ஏற்கப்படும் பட்சத்தில், பத்தாம் திகதிக்குப் பின்னரும் (மேன்முறையீட்டுத் தீர்ப்பு வரும்வரை) மேயர் பதவியை வகிக்கலாம். 'இடைநிறுத்த' வேண்டுகோளை நீதிமன்றம் நிராகரிக்குமானால், பதவி அன்றுடன் பறிபோகும்.

அடுத்ததாக என்ன நடைபெறும்? உதவி மேயராக இருப்பவரைத் தற்காலிக மேயராக்கலாம். அல்லது, சபை உறுப்பினர்களில் ஒருவரை 2014 வரைக்கும் புதிய மேயராக உறுப்பினர்களே தெரிவு செய்லாம். அல்லது, மேயருக்கான இடைத்தேர்தலை நடத்தலாம். இதற்கான செலவு எழு மில்லியன் டாலர்களாகும்.

இடைத்தேர்தல் நடக்குமானால் அதில் றொப் ஃபோர்ட் போட்டியிட முடியுமென்று விசாரணை நடத்திய நீதிபதி அறிவித்துள்ளதால், றொப் மகாமகிழ்ச்சியில் இருக்கிறார். அதில் வெற்றிபெற முடியுமென்றும் அறிவித்துள்ளனர் ஃபோர்ட் சகோதரர்கள்.

அடி சறுக்கினாலும், மீண்டும் எழும்பும் மனோபலம் அவருக்குண்டு என்பதையே இங்கு காண முடிகின்றது. அரசியலும் ஒரு விடுதலைப் போராட்டம் போன்றதுதான்!

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585



**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

## ஆண்டுமலர் ஆக்கங்கள் டிசம்பர் 17 திங்கள் வரை ஏற்கப்படும்!

கனடியத் தமிழர்களின் அடையாளமாகவும், மூத்த தமிழ் ஊடகமாகவும் மிளிரும் 'தமிழர் தகவல்' இருபத்தியிரண்டாவது ஆண்டு பூர்த்தி மலர் தயாரிப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாவது வார இறுதியில் நடைபெறும் வருடாந்த விருதுகள் வழங்கும் வைபவத்தின் போது ஆண்டு மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

பிரசுரத்துக்குத் தகுதியுடைய எழுபத்தைந்து வீதமான ஆக்கங்கள் எமக்குக் கிடைத்துள்ளன என்பதை மகிழ்வுடன் தெரியத் தருகின்றோம்.

கனடிய நாட்டின் வாழ்க்கை முறைக்குத் தேவையான தகவல்கள், அவற்றின் பின்னணி, முக்கியமான சட்ட மாற்றங்கள், கனடியத் தமிழரின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட இன்னோரன்ன விடயங்கள், புலம்பெயர் வாழ்வின் அனுபவங்கள் போன்றவைகளை மையமாகக் கொண்டு எழுதப்படும் படைப்புகளுக்கு சிறப்புரிமை வழங்கப்படும்.

தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் எழுதலாம். கட்டுரை அல்லது கவிதை வடிவில் இவைகள் அமைந்திருக்க வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படின் 416 920 9250 இலக்கத்தில் உங்கள் விபரங்களைப் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.

கட்டுரைகள் கிடைக்க வேண்டிய இறுதிநாள் இந்த மாதம் (டிசம்பர்) 17ஆம் திகதி திங்கட்கிழமை வரை நீடிக்கப் பட்டுள்ளது. கணினியில் அச்சடிக்கப்பட்ட ஆக்கங்களை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தபால் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

Tamils' Information
P.O.Box - 3, Station - F
Toronto, Ontario.

## 'ஆளிறக்கும்' வசதி கருதிய திருமணங்கள் ரத்து
## மீண்டும் பெற்றோர் 'ஸ்பொன்சர்' அனுமதி
## 2013ன் குடிவரவாளர் இலக்கு எல்லை 265,000

### No more convenience marriages for immigration

வாழ்க்கைத் துணைவரை வெளிநாட்டிலிருந்து கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்பவர்களை முன்னர் போலன்றி புதிய நடைமுறைக்குட்படுத்தும் சட்டம் கடந்த அக்டோபர் 25ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது. இதனால், 'வசதி கருதிய திருமணங்கள்' என்ற குடிவரவு மோசடி முற்றுப்பெறும் என்று குடிவரவு அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார். புதிய சட்டத்தின்படி, வாழ்க்கைத் துணைவராக ஒருவர் இரண்டு வருடங்களுக்குக் குறைவாகவும் பிள்ளைகள் இல்லாதவராகவும் இருப்பாராயின், அவர் ஸ்பொன்சரில் வந்த அடுத்த இரண்டு வருடங்கள் கூடி வாழ்ந்ததாக நிரூபிக்க வேண்டும். தவறினால், ஸ்பொன்சரில் வந்தவர் நிரந்தரக் குடியுரிமையை (Permanent resident status) இழப்பார். ஸ்பொன்சர் செய்தவரால் துன்புறுத்தப்பட்ட துணைவர்கள் விடயத்தில் சில விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஸ்பொன்சர் செய்து வாழ்க்கைத் துணைவரை கனடாவுக்கு வரவழைத்தவர்கள் அவர்களைக் கைவிட்டால் அல்லது பராமரிக்கத் தவறினால், புதிதாக ஒரு வாழ்க்கைத் துணைவரை 'ஸ்பொன்சர்' செய்ய ஐந்து வருடங்கள் காத்திருக்க வேண்டுமென்ற சட்டம் கடந்த மார்ச் மாதம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. கனடியர்களின் தாராள மனப்பான்மையையும் கருணையையும் சிலர் துஷ்பிரயோகம் செய்ததால் ஸ்பொன்சர் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### Parents and grandparents reunification again

கடந்த ஆறு மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேரன்-பேர்த்திமார், பூட்டன்-பூட்டிமாரின் ஸ்பொன்சர் விண்ணப்பங்கள் மீண்டும் அடுத்த மாதத்திலிருந்து (2013 ஜனவரி) ஏற்றுக்கொள்ளப்படுமென கனடிய குடிவரவு அமைச்சர் அறிவித்துள்ளார். அதேசமயம், டிசம்பர் 2001ல் அறிமுகம் செய்யப்பட்ட பேரன்-பேர்த்திமார், பூட்டன்-பூட்டிமாருக்கான 'சூப்பர் விசா' கடந்த மாதம் வரை ஒரு லட்சம் பேருக்கு வழங்கப்பட்டதாகவும் குடிவரவு அமைச்சர் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில், குடும்ப மீளிணைவுத் திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்படும் ஸ்பொன்சர்களின் காத்திருக்கும் காலத்தை வெகுவாகக் குறைக்கவும், புதிய தேக்க நிலை உருவாகாது தவிர்க்கவும் குடிவரவுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2011ஆம் ஆண்டில் பேரன்-பேர்த்திமார், பூட்டன்-பூட்டிமாருக்கான 14,072 ஸ்பொன்சர் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டன. 2013ஆம் ஆண்டில் இத்தொகையை 25,000 ஆக திணைக்களம் அதிகரித்துள்ளது. கடந்த இருபது வருடங்களில் ஆகக்கூடிய தொகையாக 42,743 ஸ்பொன்சர் விண்ணப்பங்கள் 1993ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மறுபுறத்தில், சுமார் 165,000 விண்ணப்பங்கள் முடிவெதுவும் எடுக்கப்படாத 'தேக்க நிலையில்' கடந்த எட்டாண்டுகளாக இருக்கின்றன.

### 2013 Immigration numbers 240,00 to 265,000

2013ஆம் ஆண்டுக்கான கனடாவின் குடிவரவாளர் எண்ணிக்கை இலக்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது, 240,000 - 265,000 வரையானதாக இருக்கும். சர்வதேச மாணவர்களுக்கு கனடா வர அனுமதி வழங்கி அவர்களை நிரந்தரக் குடியுரிமையாளர்களாக்கி கனடியப் பிரஜைகளாக்குவதே இதில் முன்னுரிமை பெறுமென அமைச்சர் அறிவித்துள்ளார். கனடாவின் எதிர்கால பொருளாதார வளத்துக்கு இங்கு கல்வி கற்று இங்கு தொழில் புரியக் கூடியவர்களே முக்கியமென்று குடிவரவுத் திணைக்கள அறிக்கை கூறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக கார்ள்ரன் மற்றும் ஒட்டாவா பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் சுட்டப்பட்டுள்ளனர். கனடாவிலுள்ள பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் சர்வதேச மாணவர்களை அனுமதிப்பதற்கான விரிவான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்- டுள்ளது. புதிய குடிவரவாளர்கள் தமது தகைமைக்குரிய தொழிலைப் பெறுவதில் பல சவால்களைச் சந்தித்துவரும் வேளையில், கனடிய அனுபவமுள்ளவர்களுக்கு விசா வழங்கும் திட்டத்தையும் புதிய இலக்கு உள்ளடக்கியுள்ளது.●



செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

வைத்தியசாலைகளில் நோயாளர் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் தொடர்பாக புதிய எச்சரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது. இலவசமான இந்த வெளியீடுகளை எடுத்து வாசிப்பதன் ஊடாகப் பலவகை நோய்களும் தொற்றுகின்றது என்பதே அந்த எச்சரிக்கையாகும். வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் மாறிமாறி இவைகளை எடுத்து வாசிப்பதால் தொற்று நோய் அபாயம் அதிகமிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் வின்ட்சர் நகரத்துக்கும் அமெரிக்காவின் டெற்றொயிட் நகரத்துக்குமிடையே புதிய பாலமொன்று அமைக்கப்படவுள்ளது. சில காலமாக இங்கு நிலத்தின் மேலான அல்லது நிலத்தின் கீழான பாதையொன்றை அமைக்கும் முயற்சிக்கு மிச்சிக்கன் நகரத்திலிருந்து எதிர்ப்பிருந்தது. புதிய பாலத்தை அமைக்கும் முழுச் செலவையும் கனடா ஏற்றுக்கொண்டதையடுத்து, பிரச்சனைக்கு முடிவு காணப்பட்டுள்ளது. இதற்கு நான்கு பில்லியன் டாலர் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ரொறன்ரோ நகரப் பகுதியில் அடுத்த மாதம் (2013 ஜனவரி) நடைமுறைக்கு வரவிருந்த பிளாஸ்ரிக் பைகளின் பாவனைத் தடை, மேலும் நான்கு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. வர்த்தக நிறுவனங்களிடமிருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து ஆறு மாத நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக் பைகளுக்குப் பதிலாக நீண்ட கால பாவனைக்கான தடித்த பைகள் படிப்படியாக வரத்தொடங்கியுள்ளது. குப்பைகளைச் சேகரித்து வைக்கும் பிளாஸ்ரிக் பைகளுக்கு எந்தத் தடையுமில்லை.

ஒன்ராறியோ குடியிருப்பாளர்களுக்குப் பல்வேறு அரச தொடர்பான சேவைகளை ஏழு நாட்களும் இருபத்திநான்கு மணித்தியாலங்களும் வழங்கி வந்த தன்னியக்க இயந்திரக் கருவிகளை (Kiosk) நிரந்தரமாக மூடிவிட முடிவாகியுள்ளது. Service Onntario என்னும் மாகாண சேவை நிலையங்கள் இப்போது நேரடியாக வாகன சாரதி அனுமதி, ஓஹிப் அட்டை விநியோகம், அரச சேவையுடன் சம்பந்தமான விலாச மாற்றங்கள் உட்பட்ட பிரதான சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றன.

'சன் சி கப்பலில்' கனடா வந்த 492 இலங்கைத் தமிழ் அகதிகளில் இதுவரை இருபது பேர் மட்டுமே அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். முப்பத்தைந்து பேரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளது. 23 பேரைக் கனடாவுக்குள் அனுமதிக்க முடியாதென கனடிய குடிவரவு அகதிகள் சபை (Immigration and Refugee Board) முடிவெடுத்துள்ளது. 414 பேர் தொடர்பான முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இத்தகவலை கனடிய பாதுகாப்பு அமைச்சர் விக் ரோஸ் கடந்த மாதம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

ரொறன்ரோவில் சில வீதிகளில் தண்டவாளத்தில் ஓடும் புதிய ரக மின்சார பேருந்துகள் (Street Cars) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நவீன வடிவமைப்பைக் கொண்ட இந்தப் பயண வண்டிகள் முன்னவைகளிலும் இரண்டு மடங்கு அதிகமான (சுமார் 148) பயணிகளை ஏற்றக்கூடியவை; அத்துடன் உயரத்திலும் குறைந்து சிறிய ரக விமானம் போன்ற தோற்றத்தைக் கொண்டவை. 2014ஆம் ஆண்டில் நகரின் அனைத்துப் பாதைகளிலும் புதிய ரக மின்சாரப் பேருந்துகள் பாவனையிலிருக்கும்.

வரியில்லாத சேமிப்புக் கணக்கில் (Tax Free Saving Account) அதிகூடிய தொகையை 5,500 டாலர்களாக நிதியமைச்சு அதிகரித்துள்ளது. அடுத்த மாதத்திலிருந்து இது நடைமுறைக்கு வரும். தற்போது இந்த வைப்புத் தொகையின் உச்ச அளவு ஐயாயிரம் டாலர்களாகவிருக்கிறது. 5,500 டாலர்களை மாதாமாதம் சிறு தொகையாக வைப்பிலிட முடியும். வருட முடிவில் வருமானவரி செலுத்தும்போது, இக்கணக்கில் வைப்பிலிடப்படும் தொகைக்கு வரி விலக்குண்டு.

## தனித்தமிழ் பெயர்களுக்கு 1500 வெள்ளிகள் பரிசு

கனடாவில் இயங்கும் தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் 2007-2012ஆம் ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளில் தனித்தமிழ் பெயர்களைக் கொண்டவர்களுக்கு பணப் பரிசு வழங்கும் திட்டத்தை இவ்வருடமும் நடைமுறைப்படுத்துகின்றது. இதற்கான விண்ணப்பங்களை பிள்ளைகளின் பெற்றோர் மட்டும் அனுப்பமுடியும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் தெரிவானால், தகுதியுடையோர் குடவோலை மூலம் தெரிவாவர். விண்ணப்பமுடிவு திகதி 2013 ஜனவரி 10ஆம் திகதி. ஜனவரி 14ல் கனடா கந்தசாமி மண்டபத்தில் நடைபெறும் தமிழ்ப்புத்தாண்டு, தைப்பொங்கல் மற்றும் திருவள்ளுவர் பிறந்தநாள் ஆகியவை ஒன்றிணைந்த விழாவில் பரிசுகள் வழங்கப்படுமெனக் கழகம் அறிவித்துள்ளது. மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் படைப்பாளிகள் கழகத்துடன் 416 281 1165 இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## பெட்ரோல் விலை குறைய மாட்டாது!

முன்னர் அறிவிக்கப்பட்டதுபோன்று, இந்த வருட கிறிஸ்மஸ் விடுமுறை காலத்தின்போது பெட்ரோல் விலை ஒரு டாலருக்குக் கீழே செல்லாதென இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது ஒரு லிட்டர் ஒரு டாலர் இருபது சதத்துக்குக் குறைவதாகவில்லை இந்த விலையே விடுமுறை காலத்தின் போதும் தொடருமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பாடசாலை மைதானங்களை விற்பதற்கு நடவடிக்கை

ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச் சபைகளின் கீழுள்ள 127 பாடசாலைகளின் விளையாட்டு மைதானக் காணிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாடசாலைச் சபை உறுப்பினர்களின் எதிர்ப்பினால் இது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால், பெற்றோர் கருத்தறியப்பட்ட பின்னர் முடிவெடுக்கப்படும். 127 மைதான நிலங்களையும் விற்பனை செய்வதால் கிடைக்கும் நூறு மில்லியன் டாலர்களை பாடசாலைகளின் கட்டிட திருத்த வேலைகளுக்குப் பயன்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'விருப்பம் கலந்த முரண்பாடு' குற்றச்சாட்டு நிரூபணம்

# ரொறன்ரோ மேயர் றொப் பதவி நீக்க உத்தரவு ஆனால் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும்



ரொறன்ரோ மேயர் றொப் ஃபோர்ட்டுக்கு எதிராக நகர வரியிறுப்பாளர் ஒருவர் தாக்கல் செய்த 'விருப்பம் கலந்த முரண்பாடு' குற்றச்சாட்டு வழக்கில் அவரைக் குற்றவாளியாகக் கண்ட ஒன்ராறியோ நீதியரசர் சார்ள்ஸ் ஹாக்லான்ட், மேயர் பதவியிலிருந்து அவரை நீக்கும் தீர்ப்பைக் கடந்த மாதம் 26ஆம் திகதி வழங்கினார். ஆனாலும், இதனை அமுலுக்குக் கொண்டுவர மேயருக்குப் பதினான்கு நாட்கள் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. அதேசமயம் இனிவரும் மேயர் தேர்தல்களில் றொப் ஃபோர்ட் போட்டியிடும் தகுதியை நீதிபதி தடுக்கவில்லை. "இடைத்தேர்தல் வந்தால் அதிலும் போட்டியிட முடியும்" என்று நீதிபதி கடந்த 30ஆம் திகதி தெரிவித்தார். இத்தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதாக றொப் ஃபோர்ட் தெரிவித்துள்ளார். மேன்முறையீட்டு விசாரணைத் தீர்ப்பு (stay order) கிடைக்கும்வரை தொடர்ந்து மேயர் பதவியை வகிக்கவும் அவர் அனுமதி கோரவுள்ளார். றொப் ஃபோர்ட் பதவியிழக்கும் பட்சத்தில், அந்த இடத்தை நிரப்ப மூன்று வழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தற்போதைய உதவி மேயர் டக் ஹொலிடே தற்காலிகமாகச் சில காலம் பதவி வகிக்கலாம். அல்லது தற்போதைய உறுப்பினர்களில் ஒருவரை கூடிய வாக்குகளால் புதிய மேயராகத் தெரிவு செய்யலாம். அல்லது, எழு மில்லியன் டாலர் செலவில் புதிய மேயர் தேர்தலை நடத்தலாம். அவ்வாறு தேர்தல் நடைபெறுமானால், அதில் தாம் போட்டியிடப் போவதாக றொப் ஃபோர்ட் அறிவித்துள்ளார். வழமையான அடுத்த நகரசபைத் தேர்தல் 2014 அக்டோபரில் நடைபெறவேண்டும்.●

# ஒபாமாவுக்கு மேலும் 4 ஆண்டு



அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா (51) மீண்டும் தெரிவாகி, அடுத்த 4ஆண்டுகளுக்கு இப்பதவியை வகிக்க உள்ளார். கடந்த மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ஒபாமாவுக்கு 62.6 மில்லியன் வாக்குகள் (51 வீதம்) கிடைத்தன. குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட மிற் றொம்னி 59.1 மில்லியன் வாக்குகள் (48 வீதம்) வாக்குகள் பெற்றார். அமெரிக்க தேர்தல் முறைமையின்படி, ஒருவர் வெற்றி பெறுவதற்கு 538 தொகுதி வாக்குகளில் 270 பெறவேண்டும். ஒபாமாவாவுக்கு 332ம், றொட்னிக்கு 206ம் கிடைத்தன. வழக்கமான வடகிழக்கு மாநிலங்களில் அதிக வாக்குகளைப் பெற்ற ஒபாமா, இறுதியில் கலிபோர்னியா, புளோரிடா, ஒஹையோ, ஐயோவா, கொலராடோ வாக்குகளால் வெற்றியைத் தமதாக்கிக் கொண்டார்.●

ஒன்ராறியோ லிபரல் கட்சித் தலைவர் பதவி:

# குறுகிய கால முதலமைச்சராவதற்கு ஏழு பேர் போட்டி!









கடந்த அக்டோபர் மாதம் 15ஆம் திகதி திடீரென ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் பதவியை டால்ரன் மக்கன்ரி துறந்ததையடுத்து, கட்சியின் தலைமைப் பதவியும் வெற்றிடமாகியது. புதிய கட்சித் தலைவரைத் தெரிவதற்கான ஒன்ராறியோ லிபரலின் மாநாடு அடுத்த மாதம் (ஜனவரி) 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. புதிய தலைவராகத் தெரிவாபவர், ஒன்ராறியோவின் அடுத்த முதலமைச்சராகப் பதவியேற்பார். லிபரல் இங்கு சிறுபான்மை அரசாகவிருப்பதால் யார்தான் முதலமைச்சரானாலும் அவரே இந்த மாகாணத்தின் குறுகிய கால முதலமைச்சர் என்னும் 'பட்டம்' பெற்றவராவார். அதனைத் தெரிந்துகொண்டே இந்தப் பதவியைக் கைப்பற்ற எழு பேர் போட்டியிடுகின்றனர். புதிய தலைவர் பதவிக்குப் போட்டியிடவிருப்பவர்களில் அமைச்சர்களாகவிருப்பவர்கள் முதலில் தங்கள் பதவியை ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று டால்ரன் மக்கன்ரி நிபந்தனையிட்டார். இந்த நிபந்தனையை ஏற்று ஐந்து அமைச்சர்கள் பதவியைத் துறந்து கட்சித் தலைவருக்குப் போட்டியிடுகின்றனர். கிளெய்ன் முரே, எரிக் ஹொஸ்கின்ஸ், சார்ள்ஸ் சூசா, ஹரீந்தர் தாக்கர், கத்லீன் வெய்ன் ஆகியோரே இந்த அமைச்சர்கள், இவர்கள் தவிர தற்போது மாகாண சபை உறுப்பினர்களாகவில்லாத முன்னாள் அமைச்சர்கள் ஜெராட் கென்னடி, சான்ட்ரோ பப்பற்றெலா ஆகியோரும் போட்டியிடுகின்றனர். சான்ட்ராவும், ஜெராட் கென்னடியும் அரசியலில் நீண்ட அனுபவமும், முக்கியமான அமைச்சுப் பதவிகளையும் வகித்து அனுபவசாலிகள் என்று ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. ஒன்ராறியோ என். டி. பி தலைவராகவுள்ள அன்ட்றியோ ஹோவார்ட்டின் அரசியல் செல்வாக்கை முறியடிக்க, பெண்ணொருவர் லிபரல் தலைவராக வேண்டுமென்ற கருத்து கட்சிக்குள் நிலவுகின்றது. யார் தலைவராகி முதல்வராகினாலும் அடுத்த கோடை விடுமுறைக்கு முன்னர் ஒன்ராறியோ மாகாணம் மற்றொரு தேர்தலைச் சந்திக்குமென அரசறிஞர்கள் எதிர்வு கூறி வருகின்றனர்.●

# மூன்று இடைத்தேர்தல் முடிவுகள்: கன்சர்வேடிவ் 2: என். டி. பி ஒன்று

கடந்த மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற கனடிய நாடாளுமன்றத்துக்கான மூன்று இடைத் தேர்தல்களில் முன்னர் இருந்ததைப் போன்று இரண்டை கன்சர்வேடிவ்வும், ஒன்றை என். டி. பியும் கைப்பற்றியுள்ளன. ஆனால், எதிர்பார்க்காத அளவில் மேற்குக் கனடாவில் பசுமைக் கட்சி அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது. தேர்தல் முடிவுகள் விபரம்: விக்டோரியா - முரே றான்கின் (என். டி. பி). டுர்ஹாம் - எரின் ஓ ருல் (கன்சர்வேடிவ்). கல்ஹேரி: - ஜோன் குறொகற் (கன்சர்வேடிவ்).●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன் மனநோய் நிபுணர்

# நோயில்லாத ஒரு நோய் மனக் கஷ்டம் - Stress -2

அடுத்ததாக இந்த Stress எமது உடம்பில் உள்ள எல்லா உறுப்புகளையும் பாதிக்கின்றது. Stress இனால் எமது Blood Pressure கூடலாம், Diabetes உள்ளவர்களது Blood Sugar கட்டுப்பாடு இன்றிப் போக நேரிடலாம், Stress இனால் வயிற்றில் கூடிய அளவு அமிலம் சுரப்பதால், அதன் விளைவாக வயிற்றுப் புண் அதாவது Peptic Ulcer ஏற்படலாம், Angina போன்ற நெஞ்சு நோயை வரவழைக்கலாம். எமது மூளையில் உள்ள Neurochemical ல் மாற்றங்களால் ஏற்படும் வருத்தங்களான Depression, Paranoia போன்ற நோய்களால் தாக்கப்படலாம். எமது தோலில் ஏற்படும் Skin condition உதாரணமாக Psoriasis என்று கூறப்படும் வருத்தங்கள், எவ்வளவு மருந்துகளைப் பாவித்தாலும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியாது நாம் அவலப்படலாம். Rheumatoid arthritis போன்ற வருத்தங்கள் நாம் Stress ஐ கூடுதலாக அனுபவிக்கும் பொழுது, கூடுதலாக எம்மை தாக்குவதை பலர் அனுபவரீதியாக கண்டிருப்பீர்கள். நாம் இன்னல்களை அனுபவிக்கும் பொழுது தலைமயிர் உதிர்வதை பலர் அறிவர். Stress ஏற்படும் பொழுது பலர் வயிற்றோட்டம் அதாவது Loose Stools அல்லது Diarrhoea போன்றவற்றை அனுபவிக்கலாம். சிலர் தாங்க முடியாத தலையிடி, உடல் உளைவு, மறதி போன்றவற்றை அனுபவித்திருப்பீர்கள். இப்படியே எவ்வளவோ கூறிக் கொண்டே போகலாம்.

ஆகவே, நாம் இந்த Stress ஐக் குறைப்பதற்கு எம்மால் இயன்ற அளவு முயற்சிக்க வேண்டும். இவற்றில் சிலவற்றைப் பற்றி இந்தக் கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டேன். எல்லாவற்றிலும் சிறந்த மருந்து என்ன என்று நீங்கள் என்னைக் கேட்டால், நான் முழு மனதோடு கூறும் பதில் கடவுள் வழிபாடு என்பதே. கடவுள் எம்மோடு எப்பொழுதும் இருக்கின்றார். இதை அறியாத சிலர் வீணாக மனதை அலட்டிக் கொள்கின்றார்கள். எத்தனையோ கோயில்களுக்குச் சென்றோம், எத்தனையோ பிரார்த்தனைகள் செய்தோம் ஆனால் கடவுளை நாம் காணவில்லை என்று கூறுபவர்களும் உண்டு. "கடவுள் எங்கே இருக்கின்றார், இதெல்லாம் வீண் வரட்டு வேதாந்தம்" என்று கூறுபவர்களும் உண்டு. நீர் ஒரு வைத்தியர், விஞ்ஞானம் படித்தவர், எங்கே எனக்கு உமது கடவுளைக் காட்டும் பார்க்கலாம் என்று சவால் அடித்தவர்களும் உண்டு. கடவுள் இல்லை; இது சில சமயவாதிகளின் வீண் பகற்கனவு; ஆகவே இந்தப் பொருளைப் பற்றி என்னோடு பேச வேண்டாம் என்று கூறியவர்களும் உண்டு.

ஆனால் நான் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். பூனை கண்ணை மூடினால் உலகமே இருண்டு விடுமோ? எம்மில் பலர் கிணற்றுத் தவளை போன்று வாழ்க்கை நடத்துகின்றோம். ஜன்னல்களை திரைச்சீலையால் மறைத்து விட்டு, சூரிய வெளிச்சம் வரவில்லை, ஆகவே சூரியன் இல்லை என்று கூறுபவர்கள் போல் சிலர் வாழ்கின்றோம். ஆண்டவனை கண்ணால் நாம் பார்ப்பதற்கு முன் எமது மனத்தால் உணர வேண்டும். இப்படி எமது மனத்தால் உணர்வதற்கு அந்த ஆண்டவனின் அனுக்கிரகம் வேண்டும். "அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்று தேவாரம் கூறுகின்றது. அந்த ஆண்டவனின் அருள் இன்றி நாம் அவரை உணர முடியாது. ஆகவே நாம் அந்த அருள் வேண்டி தினமும் பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனை மூலமாக நாம் கடவுளை உணர முடியும். கடவுளை உணர்ந்த பின், எமது வாழ்க்கையை ஆண்டவன் எவ்வாறு அருள் புரிந்து காத்து வருகின்றார் என்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது.

நாம் எமது நாளாந்த வாழ்க்கையில் நடக்கும் எத்தனையோ சம்பவங்களைத் திரும்ப நினைவு கூர்ந்து பார்த்தால், நாம் ஏதோ விதிவசத்தால் தப்பி விட்டோம், ஏதோ அதிர்ஷ்டத்தால் இது நடந்துவிட்டது, ஏதோ கடவுள் போல் இவர் வந்து எம்மைக் காப்பாற்றி விட்டார் என்று பலர் கூறக் கேட்டிருப்பீர்கள். ஆனால் உண்மை என்னவென்றால் கடவுள் மக்களை தனது உபகரணமாகப் பாவித்து எம்மை எத்தனையோ துன்பங்களில் இருந்து காப்பாற்றி வருகின்றார்.

எமது வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு சம்பவத்திற்கும் ஒரு காரணம் உண்டு. அந்தக் காரணம் எமக்கு உடனடியாகத் தெரியாது இருக்கலாம். ஆனால் நாட்கள், மாதங்கள், சில வேளைகளில் பல வருடங்கள் சென்ற பின், நாம் அதை நினைவு கூரும் பொழுது அர்த்தம் புரிகின்றது. ஆண்டவன் செயலை நினைந்து மனமுருகி நன்றி நவில்கிறோம். கண்ணிருந்தும் குருடர்களாக எமது வாழ்க்கையை நடத்துகிறோம். இயேசு நாதரை மந்திரவாதி என்று கூறி சிலுவையில் அறைந்தார்கள். 300 வருடங்களுக்குப் பின்தான் இயேசு நாதர் ஒரு கடவுளின் அவதாரம், ஆண்டவனின் புத்திரன் என்பதை உலகம் உணரத் தொடங்கியது. இப்போது எம்மிடையே கடவுள் மனித உருவில் Swami Sathya Sai Baba சத்ய சாயிபாபா வாக புட்டபர்த்தியில் இருந்து உலகம் முழுவதும் அருள் பாலித்து வருகின்றார். ஆனால் எமது அறியாமையால் எமது சிறிய மூளைக்கு எட்டாமையால் நாம் கண் - இருந்தும் குருடர்களாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

கடவுள் ஒன்றே! நாம் அவரை பல விதமாக அழைக்கிறோம். இயேசு என்றும் முருகன் என்றும், சிவன் என்றும், அல்லா என்றும் பலவிதமாக அழைக்கின்றோம். பெயர்கள் பல ஆனால் அர்த்தம் ஒன்றுதான். இதற்காக நாம் எமக்குள் வீண் விவாதங்கள் எழுப்பத் தேவையில்லை. மதங்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவை. எல்லா மதங்களும் கடைசியில் ஆண்டவனிடத்தே சங்கமமாகின்றது. நதிகள் பல இடங்களில் இருந்து ஊற்றெடுத்தாலும் இறுதியில் சமுத்திரத்தில் சங்கமமாகின்றது. இதை விட வேறு உண்மை இல்லை.

ஆகவே, இந்த ஆண்டவனின் அனுக்கிரகத்தை வேண்டி நாம் தினமும் பிரார்த்திக்க வேண்டும். காலை எழுந்தவுடன் பிரார்த்தனைகளுடன் எமது கடமைகளை செய்தல் வேண்டும். மாலையில் துயில் கொள்வதற்கு முன் எம்மைக் காத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறி அவனுடைய அருளோடு மறு நாளைக் காண்பதற்கு வேண்டி துயில் கொள்ளல் வேண்டும். பிரார்த்தனைகள், தியானம் (prayer, meditation) வைத்தியர்கள் தரும் மருந்திலும் பார்க்க மிகவும் சக்தி வாய்ந்தவை. இவற்றால் எத்தனையோ பேர் தங்கள் வருத்தங்கள், துன்பங்கள் போன்றவை குறைவதை அனுபவ ரீதியாகக் கண்டிருக்கின்றார்கள். ஒருவர் தனது Psorian, arthritis, diabetes போன்ற வருத்தங்கள் வைத்தியர்களின் மருந்தோடு மாத்திரம் நிற்காமல் தியானத்தாலும், பிரார்த்தனைகளாலும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பதாக மிகவும் மனம் உருகிக் கூறினார். இதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அன்புக் கட்டளையும் பணித்தார்.

ஆகவே எந்த விதமான இன்னல்கள் வந்தாலும், அந்த ஆண்டவனின் பாதக் கமலங்களை இறுகப் பற்றிவிட்டால், எமது வாழ்க்கைப் படகு, சூறாவழியிலும் சுமுக-மாகப் போவதை நாம் உணரலாம். மேற்கத்திய நாட்டவர் இதை இப்பொழுது நன்கு உணர்கிறார்கள். அவர்களை எமது தியானங்கள், Yoga, பிரார்த்தனைகளில் கூடிய அக்கறையும் ஆர்வமும் காட்டுவதன்றி, குருவை மிஞ்சிய சிஷ்யர் என்று கூறும் அளவிற்கு ஆத்மீக வாழ்க்கையில் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். அதே வேளையில் நாம் மேற்கத்திய மோகத்தில் மூழ்கி, மாற்று நிலைமையை அடைந்து கொண்டு இருக்கின்றோம். இந்த நிலை மாற வேண்டும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இரண்டு வயிறுகள்

என்னுடைய மனைவி சொல்வார் என் உடம்பு கண்ணாடித் தன்மை வாய்ந்தது என்று. அது முற்றிலும் உண்மை. நேற்றிரவு நடந்த விருந்திலும் அதை உறுதிசெய்ய முடிந்தது. ஒரு பெண் சிற்றுண்டியை தட்டத்தில் ஏந்தியபடி ஒவ்வொருவராக கொடுத்துக்கொண்டு வந்தார். வரிசையில் அடுத்தது நான். என் முறை வந்ததும் தட்டத்தை அப்படியே சுழற்றி எடுத்து அடுத்தவருக்கு நீட்டிக்கொண்டு போனார். காரணம் என்னை அவர் கண்கள் பார்க்கவில்லை. விருந்துகளில் என்னை ஒருவரும் காண்பதில்லை முக்கியமாக பரிசாரகிகள். என் உடம்பு கண்ணாடியால் செய்யப்பட்டிருக்கிறது. யாராவது உணவு தந்திருந்தால்தான் நான் ஆச்சரியப்பட்டிருப்பேன். ஓர் இரவு உணவு இல்லாமல் உறங்கப் போனால்தான் என்ன?

நேற்று படித்த செய்தியும் அதைத்தான் சொன்னது. உலகத்தில் ஏழுபேரில் ஒருவர் இரவு பட்டினியோடு உறங்கச் செல்கிறார். இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் எத்தனை மோசமான உலகில் நாங்கள் வாழ்கிறோம். இரவு பட்டினியோடு உறங்கச் செல்லும் ஒரு குழந்தையின் எதிர்காலம் என்னவாகும்? ஒரு காலத்தில் 75 மில்லியன் மக்களைக் கொன்ற கொள்ளைநோய் எப்போவோ ஒழிந்துவிட்டது. அம்மை நோய் ஒழிந்துவிட்டது. கோமாரி ஒழிந்துவிட்டது. பசி, அதுகூட ஒரு நோய்தானே, அது மட்டும் இன்னும் ஒழியவில்லை. புறநானூறுப் புலவர் ஒருவர் 'எறும்பு முட்டையை காவுவதுபோல சிறுவர்கள் சோற்று மூட்டையுடன் வரிசையாகப் போகிறார்கள். பசிப்பிணி மருத்துவன் வீடு எங்கே இருக்கிறது. கிட்டவா, தூரவா?' என்று வினவுகிறார். இந்த உலகில் பணக்காரர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் ஏழைகள், அவர்கள் என்றுமே இருப்பார்கள். அவர்களை ஒழிக்கவே முடியாது.

எறும்புகள் பட்டினியால் சாவது கிடையாது. எறும்புகளுக்கு இரண்டு வயிறுகள் உள்ளன. ஒரு வயிற்றில் அதற்கான உணவு. இன்னொரு வயிறு பொதுவான வயிறு. அதிலே உள்ள உணவை வேறு எந்த எறும்பும் எடுத்து உண்டு கொள்ளலாம். எறும்புகளைப்போல சக உயிரை நேசிக்கும் வேறு எந்த உயிரினமும் இருப்பதாகத் தெரியவில்லை. மனிதனுக்கும் இரண்டு வயிறு இருந்தால் பசிப்பிணி ஒழிந்துபோகும். ஒரு வயிற்றில் அவனுக்கான உணவு. இன்னொரு வயிற்றில் பொது உணவு. அதை யார் வேண்டுமானாலும் எடுத்து உண்டு கொள்ளலாம். மனிதனுக்கு இரண்டு வயிறுகளை இனிமேல் உருவாக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு மனிதனும் இன்னொருவனுக்கு உணவு அளிக்கமுடியும். அப்படிச் செய்தாலே பூமியில் வறுமை ஒழிந்துவிடும்.

எனக்குப் பக்கத்தில் ஒருவர் வெகுநேரமாக உட்கார்ந்திருக்கிறார். என்னுடைய பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. மனைவி சொன்னதுபோல என்னுடைய உடம்பு கண்ணாடி உடம்பாக இருப்பது காரணமாக இருக்கலாம். 100 பழைய லொத்தர் டிக்கட்டுகளை வைத்து ஆராய்ந்து கொண்டிருந்தார். கண்ணாடி உடம்பை விட்டு வெளியே வந்து நான் 'என்ன செய்கிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் திடுக்கிட்டு 'பழைய டிக்கட்டுகளை ஆராய்ந்தால் மிகச் சரியாக அடுத்து வெல்லும் லொத்தர் டிக்கட்டை கண்டுபிடித்து வாங்கலாம்' என்றார். 'இங்கே எதற்காக உட்கார்ந்திருக்கிறீர்கள்?' என்றேன். அதற்கும் புதிரான பதில் கிடைத்தது. 'என்னுடைய ராணித் தேனீ பறந்துவிட்டது. நண்பர் ஒருவர் ராணித் தேனீ விற்பனைக்கு இருப்பதாகச் சொன்னார். அவருக்காக காத்திருக்கிறேன்.' ஆர்வமாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அந்த மனிதரின் மீதி விருத்தாந்தத்தை கேட்டு தெரிந்துகொண்டேன்.
அவருடைய பெயர் இஸ்ரார். அவரிடம் இரண்டு பொழுதுபோக்குகள் உள்ளன. ஒன்று, லொத்தர் டிக்கட் வாங்குவது. இரண்டாவது, தேனீ வளர்ப்பது. ராணித்தேனீயை வைத்து புது தேனீக்கூட்டத்தை உருவாக்க முயற்சிக்கிறார். என்னை அவர் வீட்டுக்கு வரச் சொன்னார். தேனடையை என் கண்முன்னே பிழிந்து நல்ல தேன் தருவதாகச் சொன்னார். 'என்ன விலை?' என்று கேட்டேன். சொன்னார். என்னை வறுமைக் கோட்டுக்கு கீழே தள்ளிவிடும் முயற்சி என்று பட்டது. என் தயக்கத்தை பார்த்து உங்களுக்கு 50 வீதம் கழிவு உண்டு என ஆசை காட்டினார்.

அடுத்த நாள் காலை அவர் கொடுத்த முகவரிக்கு புறப்பட்டேன். அகலமான வாய் போத்தல்கள் கொண்டு வரச் சொல்லியிருந்தார். கடந்த இரண்டு மணி நேரமாக மனைவி பலவிதமான போத்தல்களை பல அளவுகளில் பல நிறங்களில் சேகரித்து, கழுவி தயாராக வைத்திருந்தார். அவற்றை ஞாபகமாக இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டேன்.. கனடாவில் தேனீ வளர்ப்பது எத்தனை சிரமமான காரியம் என்பது எனக்குத் தெரியும். வருடத்தில் ஏழு மாதங்கள் பூக்கள் கிடையாது. ஆகவே தேனீக்களும் இல்லை. அவை கூட்டுக்குள்ளே ஒருவித உறைநிலையில் கிடந்து இருக்கும் உணவை உண்டு உயிர் வாழும். ஏப்ரல் மாதம் தொடங்கி செப்டம்பர் வரைக்கும் சுறுசுறுப்பாக பூந்தேன் சேகரிக்கும்.

நான் போனது செப்டம்பர் மாதக் கடைசியில். அவருடைய வீடு பண்ணை வீடுபோல பெரிசாக அடர்ந்த தோட்டத்துடன் ஒதுக்குப்புறமாக இருக்கும் என நினைத்தேன். ஆனால் அப்படியில்லை. சின்ன வீடுதான். ஒடுக்கமான வீதியின் முடிவில் நெருக்கமான வீடுகளுக்கு நடுவில் இருந்தது. அழைப்பு மணியை அடித்ததும் வாசல் கதவு பறவை செட்டை விரிப்பதுபோல இரண்டு பக்கமும் பிளந்து திறந்தது. 'நீங்களா?' என்றார். 'நான்தான்' என்றேன். 'எங்கேயிருந்து வருகிறீர்கள்?' 'சிலோன்' என்றேன். 'அப்படியா? அது எந்த தெருவில் இருக்கிறது?' 'இங்கே பக்கத்தில்தான்.'

இஸ்ரார் தலையாலே நுழைந்து மாட்டும் நீண்ட அங்கி தரித்திருந்தார். அழுகிய பூசணிக்காய்போல சற்று உள்ளுக்கு போன முகம். சமையலறை வழியாக கூடத்துக்குள் நுழைந்தால் அவர் சோபாவில் படுத்துக் கிடந்த உடல் வடிவம் அப்படியே இருந்தது. எங்கே உட்காருவது என்று தெரியவில்லை. இன்ன இடத்தில் இன்ன சாமான் என்று இல்லை. எல்லா இடத்திலும் எல்லா சாமானும் இருந்தன. இனம் காண முடியாத ஏதோ மிருக வாடை முகத்தில் அடித்தது. தேனீ வளர்ப்புக்கான ஏதாவது அடையாளம் தென்படுகிறதா என்று பார்த்தேன். பெரிய ஏமாற்றமாக இருந்தது. 'போத்தல் கொண்டு வந்தீர்களா?' என்று கேட்டார். நான் சேகரித்து வந்த அத்தனை போத்தல்களையும் மேசையில் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அடுக்கினேன். ராணுவ அணிவகுப்பை பார்வையிடுவதுபோல அதைப் பார்த்து தலையை ஆட்டினார். 'என்னுடைய தேனீ வளர்ப்பு பெட்டிகளைப் பார்க்கப் போகிறீர்களா?' என்றார். ஓமோம் என்று சொல்லி அவர் பின்னால் புறப்பட்டேன்.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்



# மனமே! நலமா?

27

உடலையும் உயிரையும் இணைப்பதுதான் மனம். மனம் இருக்கும் பகுதிதான் மூளை. மூளை என்பது திடப்பொருளாலான ஆதாரம். மனம் சக்தி வடிவில் அங்கே சஞ்சாரம் செய்வது. "உயிரோடு இருக்கும்போது நாம் மனத்தால் நினைக்கிறோம், உயிர் போனநிலையிலும் மனம் இயங்குகிறது; மனத்தால் நினைக்க முடிகிறது; மனத்தால் அனுபவிக்க முடிகிறது". பிரபல அமெரிக்க மனச்சிகிச்சை நிபுணர் டாக்டர் மூடி (Moody) என்பவரது "வாழ்வுக்குப் பின் வாழ்வு" (Life after life) நூலின் முடிவு இதுவாகத்தான் உள்ளது.

செத்துப் பிழைத்தவர்களது அனுபவங்களே பல ஆய்வுகளை தோற்றுவித்துள்ளன. இறந்தவர்களைப் பற்றிய திபெத்திய நூல் (Tibetian Book of the Dead) இங்கு அன்புக்கு வித்திட்டு நிற்கிறது. இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டது இந்நூல். சர்வதேச மருத்துவர்கள், மனசிகிச்சை நிபுணர்கள் வேர்ஜீனியா, ஸ்ரான்போர்ட், கன்சாஸ், கலிபோர்னியா பல்கலைக்கழகங்கள் எல்லாமே உயிருக்கு என்ன நிகழ்கிறது என்று தொடர் ஆய்வுகளை நிகழ்த்தி வருகின்றன. இதிலுள்ள பிரச்சனை செத்துப் பிழைத்தவர்களை கண்டுபிடிப்பதுதான். 'சாவுக்கு பின்வாழ்வு இருக்கிறது' என்பதனை மனச்சிகிச்சை மருத்துவர் ஒப்புக் கொள்வதுதான் இன்றுள்ள நிலை. உடல், ஆவி, ஆன்மா, உயிர், மனம், இறப்பு என்பவற்றினை தனித்தனியாக பிரித்து உணர்வதில்தான் எதிர்கால ஆய்வுகள் முனைகின்றன. 'இறப்புக்கு பின் ஆத்மா வாழ்கிறது' என்று முடிவு செய்த டாக்டர் ராஸ் பல மரணப் படுக்கையாளர்களிடம் பேட்டி கண்ட ஒருவர். பகவத்கீதை ஆத்மா சிரஞ்சீவித்துவம் கொண்டது என்பதனை என்றோ கூறிவிட்டது. நமது மூதாதையர்கள் திதி, திவசம் என்ற பெயரில் சடங்குகளை நிகழ்த்துவதின் காரணமும் இதுவாக இருக்கலாம்'

வ.உ.சியின் கருத்துப்படி "மனம் என்பது இவ் உடம்போடு கூடி நிற்கின்ற உயிரின் நினைப்பு; சில சமயங்களில் அது உடம்புக்கு அப்பாலும் இயங்கும்" என்பதாகும். மனம் என்பது இரண்டு வேலைகளில் ஈடுபடுகிறது. அதில் ஏற்படும் பயமும் தன்னைப் பற்றிய தவறான அபிப்பிராயத்தை தூண்டும். சராசரியாக பெண்களுக்கே இது அதிகம். நம்மிடமுள்ள அளவுகோலே எமது தாழ்வு மனப்பான்மைக்கு காரணமாகும். பிறரைப் போல உயரமும், புகழும், பணமும், பேச்சு வன்மையும் தனக்கு இருக்க வேண்டும் என்று சதா எண்ணிக் கொண்டிருப்பவர் பலர். இதற்கு மாறாக நல்ல குணங்களை, நல்ல நிலையினை, கிடைக்கும் மகிழ்வினை, மனநிறைவை எண்ணிப் பார்ப்பதில்லை. நம்மை நாமே ரசிக்கவும், பாராட்டவும் தெரிய வேண்டும். ஒருமரத்தில் பறவை இருந்தால் நாமும் அங்கு சென்று உட்கார்ந்து கொள்ள முடியாது. மற்றவர்களது சாதனைகளை பார்த்து ரசிக்க வேண்டுமேயொழிய மற்றவர்களைப் பார்த்து ஏக்கம் கொள்வது தவறாகும். நம்மைப் பற்றிய சுயமதிப்பீடு, நல்ல எண்ணம் என்பது உள்ளத்திற்கும் உடலுக்கும் வாழ்க்கைக்கும் அவசிய தேவையாகும். அப்போது சூழ்நிலையே மணம் வீசத் தொடங்கும், உலகம் எம்மை வரவேற்கத் தொடங்கும்.●

சந்திர மண்டலத்துக்கு போவோர் அணிவதுபோல ஓர் உடையை தந்தார். இதற்கு முன்னர் நூறுபேர் அதை அணிந்திருக்கவேண்டும். காலை சாப்பிட்ட உணவு வெளியே வரும் விருப்பத்தை தெரிவித்தது. உடை என்னை முற்றிலும் மூடியது. முகத்தில் மாத்திரம் வலைப் பின்னல். அவரும் அதேபோல ஒன்றை அணிந்து, நீல் ஆர்ம்ஸ்ரோங்க்போல நடக்க நான் பின்னால் தொடர்ந்தேன். அவர்கள் வீட்டு வெளிச்சுவரில் நீள் சதுரமாக ஓட்டை துளைத்து அதை பலகையால் மூடியிருந்தது. பலகையை அகற்றிவிட்டு அவர் நுழைய நானும் நுழைந்தேன். அரசாங்கத்துக்கு சொந்தமான ஒரு காட்டுக்குள் நின்றோம். அங்கே நாலே நாலு தேனீ வளர்ப்பு பெட்டிகள். அதிலே ஒன்றிலிருந்து ராணித்தேனீ பறந்தோடிவிட்டதால் அது மட்டும் வெறுமையாக இருந்தது.

மீதி மூன்று பெட்டிகளில் இருந்த தேனீக்கள் பறந்து வந்து எம்மைச் சூழ்ந்துகொண்டன. ஐந்து திசைகளிலும் கைகால்களை வீசிக்கொண்டு ஓடப் பார்த்தேன். இஸ்ரார் அசையவே இல்லை. சைகையினால் என்னை ஓடாமல் நிற்கச் சொன்னார். கையை நிதான-மாக பெட்டியினுள் நுழைத்து தேனடையை எடுத்துக் காட்டினார். அது பார்க்க பரிதாபமாக வரட்டிபோல ஒட்டிக்கொண்டு கிடந்தது. அதைப் பிழிந்துதான் தேன் எடுக்கவேண்டும். வெகுவிரைவில் பனிக்காலம் ஆரம்பித்துவிடும். இனி வரும் ஏப்ரல் மாதம்வரை இதை உண்டுதான் தேனீக்கள் வாழவேண்டும். 'இதைப் பிழிந்து எடுத்தால் தேனீக்களுக்கு உணவு இல்லையே' என்றேன். 'இத்தனை தூரம் நீங்கள் வந்திருக்கிறீர்களே' என்றார். 'வேண்டாம்' என்றேன். 'வேண்டாமா?' 'நான் சுப்பர்மார்க்கட்டில் வாங்கிக்கொள்கிறேன்' என்றேன். ஐந்து ஓட்டை வைத்த சேர்ட்டில் ஆறாவது பட்டனை பார்த்ததுபோல திடுக்கிட்டு குழம்பிப்போய் என்னைப் பார்த்தார். அவருடைய வாய் மூடிக்கொள்ள முன்னர் நான் புறப்பட்டேன்.

எங்கள் வாழ்க்கை திருட்டு வாழ்க்கைதான். பால் திருடுகிறோம். முட்டை திருடுகிறோம். தேன் திருடுகிறோம். திருடி வாழாமல் கொடுத்து வாழ முடியாதா? இரண்டு வயிறுகள் காவும் எறும்பு செய்வதுபோல. இருப்பதை பகிர்ந்து உண்டால் பூமியில் இரவு பட்டினியோடு படுக்கும் மனிதர்கள் இருக்கவே மாட்டார்கள்.

மனைவியிடமிருந்து குறுஞ்செய்தி மீண்டும் மீண்டும் வந்தபடி இருந்தது. செல்பேசியை எடுத்து என்னவென்று பார்த்தேன். 'தேன் நாலு போத்தல்களுக்கு மேல் வேண்டாம். தேன் நாலு போத்தல்களுக்கு மேல் வேண்டாம்.'●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றவாளிகளை நாடு கடத்தும் வேலை துரிதமடைகின்றது

குற்றவாளிகள் (கிறிமினல்கள்) என்று அடையாளம் காணப்படும் வெளிநாட்டவர்களைத் துரிதமாக நாடு கடத்தும் வேலையைக் கனடிய குடிவரவுத் திணைக்களம் வேகப்படுத்தியுள்ளது. 'The Faster Removal of Foreign Criminals Act' என்னும் சி-43 சட்டம் நிறைவேற்றப்பட்டதை-யடுத்து குற்றவாளிகளாகக் காணப்படுபவர்-களின் மேன்முறையீட்டு வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டு அவர்களை நாடுகடத்தும் வேலை துரிதமாகியுள்ளது என்று குடிவரவு பிரஜாவுரிமை அமைச்சர் ஜேசன் கெனி அறிவித்துள்ளார்.

கனடாவில் பிறந்து வளர்ந்து படித்து நீண்ட காலம் வாழ்ந்தவர்களைக் குற்றவாளிகள் என்று காரணம் காட்டி நாட்டை விட்டு வெளியேற்றுவது ஏற்கக்கூடியதல்ல என்று கனடிய வழக்கறிஞர்கள் அமைப்பு சுட்டிக்-காட்டியுள்ளது. கனடா வருவதற்கு விசா பெறுபவர்கள் போலியான விபரங்களைச் சமர்ப்பிப்பது கண்டுபிடிக்கப்படும்போது அவர்களுக்குக் கடுமையான தண்டம் விதிக்கவும் புதிய சட்ட மூலம் வழிவகுக்-கின்றது. விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிலரை நாடுகடத்தும் முயற்சி இடம்பெறுவதாக 'நாஷனல் போஸ்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆயினும் எவரது பெயரும் குறிப்பிடப்படவில்லை.

## நகரசபை உறுப்பினர்களுக்கு 3 சதவீத சம்பள உயர்வு; நகரசபை ஊழியர்களுக்கு 1.9 சதவீத சம்பள உயர்வு

ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களுக்கான சம்பளம் 3 சத வீதத்தினால் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இச்சம்பள உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு உறுப்பினரின் சம்பளம் 102,608 டாலர்களாக இருக்கும் ஆனால், தனது சம்பள உயர்வை ஏற்பதற்கு ரொறன்ரோ மேயர் றொப் போர்ட் மறுத்துள்ளார். ரொறன்ரோ நகரசபையில் 44 உறுப்பினர்கள் உள்ளனர். அதேசமயம், நகர-சபை ஊழியர்களின் சம்பளம் 1.9 சத வீதத்தினால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பாகுபாட்டினை அவர்கள் வன்மை-யாகக் கண்டித்துள்ளனர். இவர்களுக்காக சம்பள உயர்வை 2.75 சத வீதமாக்க ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததாயினும், அவ்வாறு உயர்வு வழங்கப்படவில்லை.

Editorial of the Toronto Star, November 19, 2012

## The UN failed Sri Lanka's Tamils and innocents paid the price

By the time the Israel-Gaza conflict had claimed 10 lives last week the United Nations Security Council had scrambled into an emergency session to discuss the crisis. Yet when as many as 40,000 Tamils were killed during the final months of Sri Lanka's civil war in 2009, the UN didn't hold a single formal meeting. Not at the Security Council. Not at the General Assembly. Not at the Human Rights Council.

That's just one chilling observation in a damning report to UN Secretary-General Ban Ki-moon that excoriates the UN for failing Sri Lanka's civilians. Written by former UN official Charles Petrie and an expert panel, the report has sparked a fresh call by the Canadian Tamil Congress, representing the largest Tamil diaspora, for an international war crimes inquiry. It also vindicates Prime Minister Stephen Harper's demand that Sri Lanka answer persistent concerns about war crimes and other issues.

The report slams the UN for its "grave failure" to advocate for those caught in the crossfire. Critically, the UN did not muster all the political influence and moral clout it had to keep the world fully informed, as Sri Lanka's military crushed a Tamil Tiger-led secessionist rebellion. And while both sides committed crimes, except for one rare occasion the UN failed to publicly warn the government that it could be held responsible.

Instead, the Security Council and UN Secretariat were cowed by the Sri Lankan authorities, who enjoyed "the effective acquiescence of a post-9/11 world order" to defeat an enemy regarded by many as terrorists, says an executive summary that was deleted before the report was made public last week. UN officials pulled their punches, downplayed death tolls and allegations of government crimes, left the world in the dark, and generally fell short in helping the victims.

"The UN possessed the capabilities to simultaneously strive for humanitarian access (to war zones) while also robustly condemning the perpetrators of killings of civilians," the report found. Yet "there was a continued reluctance among UN Country Team institutions to stand up for the rights of the people they were mandated to assist. In Colombo, some senior staff did not perceive the prevention of killing of civilians as their responsibility – and agency and department heads at UN Headquarters were not instructing them otherwise."

This systemic failure is appalling, coming long after the UN was thought to have absorbed the "never again" lessons from the Rwanda genocide of 1994 and Srebrenica in 1995.

No one expects miracles from the UN system. As we know from the Syria crisis, the Security Council can't always stop bloodbaths. Bashar Assad's Russian and Chinese enablers have blocked strong action. But even so, the UN has met repeatedly on Syria, condemned Assad and sent observers.

In Sri Lanka it retreated into craven silence and looked the other way. That emboldened war criminals to ply their vicious trade.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# யார் இந்த மலாலா

எனக்குப் படிக்கும் உரிமை உள்ளது என்று 14 வயதுச் சிறுமி சொல்ல நேரிடும் ஓர் உலகில்தான் நாம் இன்னமும் பாமரத்தனமாக வாழ்கின்றோமா என்ற சந்தேகம் உங்களைப் போலவே என்னுள்ளும் நெருடுகின்றது.

பெண்கள் கல்வி அறிவு பெற வேண்டும் என்பதில் ஒரு சிறுமி காட்டிய தீவிரம் அவளது பெயரை நோபல் பரிசுக்காக பரிந்துரை செய்வதற்கு காரணமாக்கி இன்று உலகின் கவனத்தை கவர்கின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிராக அவளது அறைகூவல் எங்கும் என்றும் ஒலிக்க வேண்டும் என்ற தீர்த்துக்குச் சான்றாக நவம்பர் மாதம் 10ம் திகதியை அவளது தினமாக பிரகடனப்படுத்தி மதிப்பளிக்கின்றது ஐக்கிய நாடுகள் சபை.

உலகமே உச்சரித்த அந்த பெயரின் சொந்தக்காரி – மலாலா யூசுப்சாய். தலிபான் தீவிரவாதிகள் பாடசாலை வாகனத்தை இடைமறித்து அவளது தலையிலும் கழுத்திலும் இருமுறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட தினமான அக்டோபர் மாதம் 9 ம் திகதிக்கு பின்பு நீதிக்காக போராடுபவர்களின் அடையாளம் போல் ஆகிவிட்டது அந்தப் பெயர். மலாலாவும் காயமடைந்த வேறு இரு சிறுமிகளும் லண்டனில் சிகிச்சை பெற்று குணமடைகின்றனர்.

பாகிஸ்தான் மேற்கில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியான மிக்னோரா என்ற குக்கிராமத்தில் 12 ஜுலை1997ல் மலாலா பிறந்தாள். அப்பகுதியில் பல பாடசாலைகளை நிர்வகித்து வந்த ஜியாவுதீன் ஜனநாயக அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டதுடன் தனது மகள் மலாலாவிற்கும் அரசியல் ஆர்வத்தை ஏற்படுத்தினார். தற்பொழுது ஒன்பதாம் வகுப்பு மாணவியான மலாலா பெண்களின் உரிமைக்கான இயக்கத்தில் மிகச் சிறு வயதிலேயே பங்கேற்றாள்.

ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளான தலிபான்களின் ஆதிக்கம் அங்கு அதிகம். மனித மரண தண்டனை அதனால் சர்வ சாதாரணம். பெண்கள் படிக்கக் கூடாது என்ற கொள்கையுடன் அப்பிரதேசம் முழுவதுமிருந்த நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகளை சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பாக தகர்த்துத் தரைமட்டமாக்கியது தலிபான். அப்பொழுது தனது பள்ளிக்கூடமும் பாதிப்படைந்ததைப் பார்த்துப் பாதிப்படைந்தாள் பத்து வயதான மலாலா. அன்று தந்தையின் கையை உதறிவிட்டு தரையில் புரண்டழுத மலாலா வீறுகொண்டெழுவாள் என தலிபான் உட்பட எவருமே எதிர்பார்கவில்லை.

தான் ஒரு டாக்டர் ஆக வேண்டும் அல்லது பைலட் அக வேண்டும் என்ற கனவும் அங்கு சிதைந்து போனதாக உணர்ந்தாள். எனக்குள் ஒரு புதிய கனவு உருவேறுகின்றது. எனது தேசத்தைக் காப்பாற்ற நான் அரசியல்வாதியாக விரும்புகின்றேன். எமது தேசம் பயங்கரமான நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது. நான் அந்தப் பிரச்சனைகளை அகற்றுவேன். தூக்கத்தில் வருவதல்ல கனவு. எது என்னைத் தூங்கவிடாமல் செய்கின்றதோ அதுதான் கனவு என்ற உறுதியுடன் எழுந்தாள். தன் தந்தையின் உதவியோடு சமூக வலைத்தளங்களில் பெண் அவலத்தை விரிவாக எழுதியது சக்தி மிக்க போராட்டமாகியது. பார்ப்பதற்கு பக்கத்து வீட்டுச்சிறுமி போலிருந்த அவளின் அனல் தெறிக்கும் பேச்சாற்றலால் சக மாணவிகள் திரண்டனர். பெண் உரிமை அமைப்புகள் உத்வேகம் கொடுத்தன. பாகிஸ்தான் அரசு பத்து வயது சிறுமியின் நியாயமான நிர்பபந்தமான கோரிக்கைக்குப் பணிந்தது.

பாடசாலைகள் புனரமைக்கப்பட்டன. தயங்கிய ஆசிரியர்களுக்கு தைரியமூட்டின மலாலாவின் வார்த்தைகள்.

இஸ்லாமிய நாடுகளில் சமூக அரசியல் கல்வி வேலை உரிமைகளுக்காக பெண்களின் குரலானாள். ஆணாதிக்க வெறி கொண்ட பழமைவாதிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து பெண்களின் வாழ்வை மீட்க ஆர்ப்பாட்டங்களை முன்னிலைப்படுத்தினாள். நாகரீக சமூகம் பெண்ணினத்துக்கு வழங்கிய உரிமைகளை தடுப்போர் மீது சீற்றம் கொள்ள வைத்தாள். தலிபான்களுக்கு எதிராக உக்கிரமாகப் பேசி அரங்கினை அதிர வைத்தாள்.

2008ல் பெஷாவரில் நடந்த ஒரு கூட்டத்தில் 'எனது அடிப்படை உரிமையான கல்வியைப் பறிக்க தலிபான்களுக்கு என்ன அருகதை' என அவள் பொங்கியபொழுதே பாகிஸ்தானில் ஒரு புது யுகம் உதயமாகியது என்கின்றனர் ஆய்வாளர்.

2009 முதல் பி.பி.ஸி உருது இணையத்தில் பெண்களின் நிலைகுறித்து தலிபான்களின் கலாசார ஒடுக்குமுறைகள் பற்றி புனை பெயரில் எழுதி உறங்கிய உலகை விழிக்க வைத்தாள். சும்மா இருக்குமா தலிபான்? முகம் தெரியாமலே எதிரியாகிவிட்ட மலாலாவை கொல்ல முயற்சித்து பலதடவை ஏமாறியது.

2011 அக்டோபரில் சர்வதேச சிறார் அமைதிக்கான விருது டிசம்பரில் பாகிஸ்தான் தேசிய இளைஞர் அமைதிக்கான விருது என தொடர்ந்து புகழின் உச்சத்திற்குச் சென்றாள். 2012 ஜனவரியில் கராச்சியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அவளது பெயர் சூட்டப்பட்டது. சமூக மாற்றத்துக்குரியவர் விருதை ஜனவரியிலும் அக்டோபர் மாதம் 15 ம் திகதி பாகிஸ்தானின் துணிகரத்திற்கான அதிஉயர் விருதையும் வழங்கி கௌரவம் சேர்த்துக் கொண்டது பாகிஸ்தான்.

உலகை உலுக்கிக்கொண்டிருக்கும் தலிபான்களை உலுக்கிக்கொண்டிருக்கின்றாள் ஒரு சிறுமி. அவள் மீண்டு வர மீண்டும் வரப் பிரார்த்திக்கின்றது உலகு.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரி.ரி.சி பயணக் கட்டணம் ஐந்து சதத்தால் அதிகரிப்பு

ரொறன்ரோ போக்குவரத்துக் கமிஷனால் நடத்தப்படும் போக்குவரத்துச் சேவையின் கட்டண அதிகப்பு அடுத்த மாதம் (2013 ஜனவரி) முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது. இதனால் 'டோக்கன்'களின் கட்டணம் ஐந்து சதத்தால் அதிகரிக்கும். மெட்ரோ பாஸ்' எனப்படும் வளர்ந்தோருக்கான மாதாந்த பாஸ், 128.50 சதத்திலிருந்து மூன்று டாலரினால் அதிகரிக்கின்றது. பணம் செலுத்திப் பயணிக்கும் கட்டணம் தொடர்ந்தும் மூன்று டாலர்களாகவே இருக்கும். கட்டண அதிகரிப்பினால் ரி.ரி.சியின் வருடாந்த வருமானம் பதினெட்டு மில்லியனால் அதிகரிக்கலாமென மதிப்படப்பட்டுள்ளது.

## மோசடியில் ஈடுபடும் தமிழர் அதிகரிப்பு

களவு, மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடும் கனடியத் தமிழரின் தொகை அதிகரித்து வருவதை ஊடகச் செய்திகள் காட்டுகின்றன. வங்கி அட்டைகள், கிறடிற் அட்டைகள், வங்கிக் கடன்கள் போன்றவற்றில் களவு, ஏமாற்று மோசடி செய்ததாகக் கூறப்படும் கனடியத் தமிழ் இளையோர் சிலர் அண்மைய நாட்களில் கனடா மற்றும் அமெரிக்காவில் அந்தந்த நாட்டு காவற்றுறையினரால் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## GO ரயில்-பஸ் மாதாந்த பாஸ் ரத்தாகின்றது!

ரொறன்ரோ பெரும்பாகத்தில் ரொன்ரோ நகரம் தவிர்ந்த மற்றைய பகுதிகளில் சேவையில் ஈடுபடும் Go ரயில் மற்றும் பஸ்களுக்குப் பயன்படும் மாதாந்த பாஸ் முறை 2013 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ரத்தாகவுள்ளது. கடந்த முப்பது வருடங்களாக இந்த பாஸ் நடைமுறையிலிருந்தது. GO போக்கு-வரத்தைப் பயன்படுத்துபவர்களில் 18 வீதமானவர்கள் (சுமார் 23,000 பாஸ்கள்) மாதாந்தம் பாஸ் பயன்படுத்தி வந்தனர். இந்தத் தொகை முன்னைய ஆண்டு-களைவிட 45 வீதம் குறைவான- தாகும். GO போக்குவரத்துச் சபையினால் இந்த வருட ஆகஸ்ட் மாதத்தில் பத்துப் பயணங்களுக்கும், இரு பயணங்களுக்கு-மென விற்பனை செய்யப்பட்ட சலுகைக் கட்டண டிக்கட்டுகள் ரத்துச் செய்யப்பட்டன. நாளொன்றுக்கு சராசரியாக 226,000 ஆட்கள் இந்தச் சேவையைப் பயன்படுத்துகின்றனர்.



பொன்னையா விவேகானந்தன்

# இனியன காண்பர் இயல்புணர்ந்தே

30

மனிதன் தான் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை வியந்துகொண்டிருக்கும் ஒரே விடயம் இயற்கைதான். இயற்கை பற்றி எழுந்த எண்ணற்ற வினாக்களில் சிலவற்றுக்கு மனிதன் விடை கண்டுபிடித்து விடுகின்ற அதேவேளை, இயற்கை தோற்றுவித்துக்கொண்டிருக்கும் பல புதிய வினாக்களிடம் அவன் தோற்றுக்கொண்டேயிருக்கின்றான்.

இயற்கை காட்சிகளாலும் விதிகளாலும் ஆனது. காட்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் மனிதன் விதிகளிடம் மண்டியிட்டு வருவதே கால வரலாறு.

அளவற்ற அதிகாரம், பலம், பணம் போன்றவற்றைப் பெற்றிருந்தாலும் கூட, தமக்கு ஏற்படக்கூடிய இன்பத்தையும் துன்பத்தையும் தீர்மானிக்கும் வல்லமை எந்த மனிதரிடத்தும் இல்லை. வாய்க்கின்ற வளங்களை வாழ்நாள் முழுவதும் பயனுறக் காக்கும் திறனும் மனிதரிடத்தே கிடையாது. மேடும் பள்ளமும் ஒளியும் இருளும் இயற்கையின் விதி. இதை மாற்றும் திறனும் யாருக்கும் இல்லை.
இவ்வாறான மாற்றங்கள் ஏதுமற்ற இயற்கை விதிகளின் ஆழப்பொருளை உணராது, மானுடம் பேராசையிலும், அவலத்திலும் அல்லற்படுவதைக் கண்டார் புலவர் பக்குடுக்கை நன்கணியார். தான் வாழும் சமுதாய மாந்தருக்கு வழிகாட்ட விரும்பினார்.

அதோ அங்கு தெரிகின்ற ஒரு வீட்டில் இறப்பு நடந்து விட்டது. அங்கே அவலப்பறை முழங்குகின்றது. கூடுவோர் அழுது புலம்புகின்றனர். அடுத்த தெருவில் மற்றுமொரு வீடு அழகுபடுத்தப்பட்டிருக்கின்றது. அங்கே திருமண விழா நடக்கப்போகின்றது. மக்கள் மகிழ்ச்சியாகக் கூடுகின்றனர். ஒரு வீட்டில் கணவன் இறந்து போக, ஒரு பெண் தலையிற் சூடிய பூவை இழக்கின்றாள். மற்றுமொரு பெண் அழகிய சடை பின்னி அழகழகாய்ப் பூச்சூடி கணவனைப் பெற்றுக்கொள்கின்றாள். இவ்வாறான இருவேறு வாழ்வைப் படைத்தவன் பண்பில்லாத பாவி என நொந்துகொள்ளும் நன்கணியார் இயற்கையின் இயல்பை மக்களுக்கு உணர்த்துகின்றார். இயற்கையின் ஒழுங்குகளுக்கேற்ப வாழப் பழகி இனிமை காண வேண்டும் என்கின்றார்.

ஓர் இல் நெய்தல்
கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின்
பாணி ததும்ப
புணர்ந்தோர் பூவை
அணியப் பிரிந்தோர்
பைதல் உண் கண்
பனிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்
பண்பிலாளன்,
இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்கிதன்
இயல் புணர்ந்தேரோர்

(புறம் 194)

நன்மை தீமை இரண்டையும் எதிர்கொள்வதுதான் வாழ்க்கை. எதிர்ப்படுபவை எவையானினும் எதிர்கொள்வது ஓர் இதயம் அல்லவா. தென்றல் வீசுகின்ற போது அதன் வருடலின் மென்மையுறும் மனம், புயல் வீசுகின்ற போது உடைந்து நொருங்குதல் வாழ்வாகுமா? இரண்டையும் தாங்கும் திறன் இதயத்திற்கு இருந்துவிட்டால் வாழ்வு இனிமையாகும் என்கிறது இந்தப் பாடல். மற்றுமொரு பாடலில் "உலகம் இனிதென மகிழ்ந்தன்றும் இலமே" என்கின்றார் கணியன்பூங்குன்றனார்.

காதலும் வீரமும் பெரிதும் போற்றப்பட்ட கழகக் காலத்தில், உலக இயல்புணர்ந்து மாந்தருக்கு நல்வழிகாட்டும் சான்றோர் பலர் எக்காலத்துக்கும் ஏற்ற வகையில் உயர்ந்த கருத்துகளை வழங்கிச் சென்றுள்ளனர். இவை அன்றைய தமிழ் மாந்தரின் சிந்தனைக் கருவூலச் சான்றுகளாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## இங்கேயும் மனிதர்கள் இப்படியும் மனிதர்கள்

கனடியப் புகழ்பெற்ற சிறுவன் ஒருவனின் பாடல் இறுவட்டு வெளியீடு அண்மையில் ஸ்காபரோவில் நடை-பெற்றது. பிரதிகள் பெறுவதற்குப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுள் 'அந்தப்' பெண்மணியும் ஒருவர்.

மேடையேறி இறுவட்டு பிரதியை அவர் பெற்றாராயினும், அவரது கணவருக்கு ஏனோ மனசு சரியில்லை அதனால் விழா இடைநடுவில் மனைவியை அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

தமது மனைவியை மேடைக்கு அழைக்கும்போது அவரை எவ்வாறு அறிமுகப்படுத்த வேண்டுமென அவர் எழுதிக் கொடுத்திருந்தாராம். ஆனால் கூட்டம் நடத்தியவர்கள் அதனை வாசிக்கவில்லையாம். முக்கியமாக நாடு கடந்ததில் மனைவி ஒரு 'செனட்டர்'(?) என்பதைப் பிரபல்யமாக்க முடியாது போனதுதான் அவரது எரிச்சலாம்!

இதுபற்றி விசாரித்தபோது மேலும் பல சுவாரஷ்யங்கள் தெரியவந்தது. தமிழர் பேரவை நிகழ்வுகளில் தமக்கும் மனைவிக்கும் பேச இடம் கேட்டுக் கிடைக்காதது, சில வருடங்களுக்கு முன்னர் மாவீரர் விழாவொன்றில் இருவருக்கும் பேச இடம் கேட்டும் சந்தர்ப்பம் கிடையாதது....

இவைகளால் அந்தப் பக்கங்களுக்கு இத்தம்பதியர் இப்போது திரும்பியும் பார்ப்பதில்லையாம்.

இப்படியும் இங்கு மனுஷர்!

## ஆண்கள் 'டிஷ்யூ' பேப்பர்கள்; பெண்கள் கற்பில்லாதவர்கள்

ஆண்களை 'டிஷ்யூ பேப்பர்' (ஊத்தை துடைக்கும் கடதாசி) என்று நடிகை சோனா சொல்லி விட்டதால், தமிழக ஆண்கள் துடித்துப் போய் ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளதுடன் சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளனர்.

ஆனால், பெண்கள் அமைப்பினர் சோனாவுக்கு பாதுகாப்பு வழங்கி, அவருக்காக வாதாடி வருகின்றனர்.

சில வருடங்களுக்கு முன்னர் தமிழ்ப் பெண்களின் கற்பை எள்ளி நகையாடிய நடிகை குஷ்புவை எதிர்த்து ஆண்கள் எதுவும் செய்யவில்லை. ஆனால், குஷ்பு இப்போது கலைஞர் கருணாநிதியின் இடது புறம்.

சோனா எந்தக் கட்சிக்குப் பிரமுகராக வரப் போகிறாரோ? நமீதாவைக் கேட்டால் தெரியுமாம்?

## அழகிரி ஒதுங்கிப் போகிறார்; குஷ்பு ஒதுக்கப்படுகிறார்!

கருணாநிதி வீட்டுக்குள் பயங்கர குத்துவெட்டு. யாரை எப்படிச் சமாளிப்பதென்று தெரியாமல் தலைவர் ரொம்பத் தள்ளாடுகிறார்.

டெசோ மாநாட்டுத் தீர்மானத்தை ஜெனிவா சென்று கையளித்துவிட்டுத் திரும்பிய ஸ்டாலினுக்கு விமான நிலையத்தில் மோக(?) வரவேற்பு. கருணாநிதி தமது குடும்பங்கள் சகிதமாகச் சென்று மகனை வரவேற்றார்.

அண்ணன் அழகிரி மட்டும் வரவில்லை. அந்தளவுக்கு சகோதரப் போரை அப்பா வளர்த்து விட்டிருக்கிறார். அடுத்த பக்கத்தில் தி.மு.க கொள்கை பரப்பாளர் குஷ்புவை கோபாலபுரம் வரவேண்டாம் என்று கருணாநிதியின் துணைவி தயாளுவும் மூத்த மகள் செல்வியும் தடை போட்டுள்ளனர்.

கருணாநிதியுடனும் ஸ்டாலினுடனும் குஷ்பு நெருங்கிப் பழகுவது அவர்களுக்குப் பிடிக்கவில்லையாம். என்னவென ஒன்றுமே புரியவில்லை!

## 'கின்னஸில்' பதிய வேண்டிய அபூர்வ சகோதரர்கள்!

அரசியலில் அபூர்வ சகோதரர்களைக் காண்பது அபூர்வம். அழகிரி-ஸ்டாலின் சகோதரர்களுக்கு எதிர்மாறான சகோதரர்கள் ரொறன்ரோவிலுள்ளனர்.

நகர மேயர் றொப் - உறுப்பினர் டக் ஃபோர்ட் சகோதரர்களே இவர்கள். றொப்பின் சகல ஆலோசகரும் டக்கே.

வழக்குத் தீர்ப்பின்படி றொப் மேயர் பதவி இழந்து இடைத்தேர்தலொன்று நடைபெறுமானால், புதிய மேயர் பதவிக்கு டக் ஃபோர்ட் போட்டியிடத் தயார். அவரே அறிவித்து விட்டார்.

அப்படியென்றால், காலியாகும் டக்கின் நகரசபை அங்கத்தவர் பதவித் தேர்தலில்....றொப் போட்டியிடுவாரோ?

## பேச்சாளரை ஒதுக்கிய சபையோர் வட்டப் பிரமுகர்

தமிழர் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட சிறு கருத்தரங்கொன்று ஸ்காபரோ நகரசபைக் குழு அறையில் கடந்த மாத இறுதியில் நடைபெற்றது.

பேச்சாளர்களிடமிருந்து பெரிதாக எதுவும் வரவில்லையாம். மாறாக, சிற்சபையில் இருந்த ஒருவர் நடத்திய பிரசங்கம் அங்கு சலசலப்பை ஏற்படுத்தியது.

அந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரைக் கட்டுப்படுத்த கூட்ட நடத்துனர் எடுத்த சகல முயற்சிகளும் இலகுவாக முறியடிக்கப்பட்டது.

"இந்திரா காந்தியுடன் இருந்து பேசினேன்; பார்த்தசாரதியைப் பார்த்து உரைத்தேன்; ஹாப்பரைக் கண்டு கதைத்தேன்......" என்ற கீறல் விழுந்த றெக்கோர்ட்டை எத்தனை நாள், எத்தனை கூட்டத்தில்தான் 'ஈவே'யிடம் கேட்பது.

காது புளித்துச் சலிக்கிறது வேந்தே!

## அதிதூரம், அதிவேகம் ஆயுள் 'கம்மி'யாகுமாம்!

அதிதூரம் அல்லது அதிவேகமாக ஓடினால் உடம்பு இளைக்கும், இருதயத்துக்கு நல்லது என்றுதான் இதுவரை டாக்டர்கள் கூறினார்கள்.

ஆனால் புதிய ஆய்வொன்று வேறுமாதிரிச் சொல்கிறது. இதனால் எடை குறையும், மனஅழுத்தம் மறையும். ஆனால், ஆயுள் குறைவாகுமென்று புதிய ஆய்வு சொல்கிறது.

அப்படியென்றால் குறுகிய தூரத்துக்கு மெதுவாக ஓடுவதா? இதுவரை வேகமாகத் நீண்ட தூரத்துக்கு ஓடியதை எவ்வாறு கழிப்பது? நினைக்கவே தலைச்சுத்து வரும்போல தெரிகிறது!

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் எம். கே. முருகானந்தன்



# முகத்தின் சிரிப்பு மூளையின் தெறிப்பு..

"சிரிப்பு வருது சிரிப்பு
இதன் சிறப்பை சீர்தூக்கிப் பார்ப்பதே
நமது பொறுப்பு .."

நீங்களும் இப் பாடலைக் கேட்டு இரசித்திருக்கக் கூடும். வயிறு குலுங்க எம்மைச் சிரிக்க வைத்துக் கொண்டே சாகசச் சிரிப்பென்றும், சங்கீதச் சிரிப்பென்றும், அசட்டுச் சிரிப்பென்றும், ஆணவச் சிரிப்பென்றும், சிரிப்பை வகைப்படுத்திக் காட்டியவர் மூத்த நகைச்சுவை நடிகர் கலைவாணர். அத்துடன் நின்றுவிடாது சிரிப்பின் சிறப்புகளையும் சிரித்துக் கொண்டே தனது பாட்டுடே எடுத்து காட்டியிருக்கிறார்.

விஞ்ஞான உலகு இப்பொழுதுதான் விழித்துக் கொண்டு சிரிப்புப் பற்றிப் பல ஆய்வுகளைச் செய்து அதன் சிறப்புகளை கண்டறிய முற்படுகிறது.

சிரிப்பு ஒரு சமூக செயற்பாடு:
சிரிப்பு என்பது சொற்களின் பங்களிப்பற்ற மனிதத் தொடர்பாடலின் ஒரு வடிவம் எனலாம். மனிதர்கள் தினமும் சராசரியாக 17 தடவைகள் சிரிக்கிறார்களாம். ஆனால் குழந்தைகள் 350 தடவைகளுக்கு மேல் சிரிக்கிறார்களாம்.

'நீங்கள் எதற்கெல்லாம் சிரிக்கிறீர்கள்' என்று வினவப்பட்டால் விடை என்னவாக இருக்கும்? நகைச்சுவைகளைக் கேட்டுச் சிரிக்கின்றோம் என்கிறார்கள் பலர். ஆனால் அது எப்போதும் உண்மையாக இருப்பதில்லை.

இதற்குக் காரணம் என்ன? தனியேயிருந்து ஒரு ஜோக்கை படித்து அல்லது பார்த்துச் சிரிப்பதைவிட, மற்றவர்களுடன் உரையாடும்போதே மனிதர்கள் அதிகம் சிரிக்கிறார்கள் என்கிறார் நரம்பியல் விஞ்ஞானியான Robert Provine.

அதாவது சிரிப்பானது தன்னளவானது என்பதை விட சமூக ஊடாடலுடன் கூடிய செயற்பாடாகவே பெரும்பாலும் இருக்கிறது. ஒரு விடயத்தையிட்டு நாம் தனியாக இருக்கும்போது சிரிப்பதைவிட மற்றவர்களுடன் கூடியிருக்கும்போது முப்பது மடங்கு அதிகமாகச் சிரிக்கின்றோம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

எத்தகையவர்களுடன் நாம் கூட இருக்கின்றோம் என்பதும் சிரிப்பின் அளவைத் தீர்மானிக்கிறது. எமக்கு விரும்பமானவர்களுடன் சேர்ந்திருக்கும்போதும், எம்மை அவர்கள் விரும்ப வேண்டுமென நாம் நினைப்பவர்களுடனும் கூடியிருக்கும்போதும் சிரிப்பு அதிகமாக வருகிறது.

சிரிப்பு ஆய்வு சிரிக்க சிரிக்க ஆய்வு:
இவ்வருட Summer Science Exhibition 2012ல் இது பற்றிய ஆய்வு நடைபெற்றது. எதிரொலி எழும்பாத முயைில் அமைக்கப்பட்ட அறையிலேயே இது நிகழ்த்தப்பட்டது. பல்வேறு விதமான, வித்தியாசமான சிரிப்புகளை இங்கு ஆய்வு செய்தார்கள். தன்னிச்சையாக எழுகின்ற சிரிப்பு, ஒருவர் தான் சிரிக்க விரும்பாத வேளையிலும் சிரித்தல், வலுக்கட்டாயமாகச் சிரித்தல், சிரிப்பதாக வெளிக்காட்டும் தோரணை (posed laughter), போன்ற பல வகையான சிரிப்புகள் இங்கு ஆய்வு செய்யப்பட்டது. உங்களுக்கு விருப்பமான எதை வேண்டுமானாலும் செய்து உளமாரச் சிரியுங்கள் என பங்கு பற்றியவர்களுக்குச் சொல்லப்பட்டது. பிற்பாடு தாங்கள் சிரிப்பதாக மற்றவர்களுக்கு வெளிக்காட்டும் வண்ணம் சிரிக்கவும் வேண்டப்பட்டனர்.

உள்ளே என்ன நடக்கிறதெனத் தெரியாமல் வெளியிலிருந்து இச் சிரிப்புகளைப் பார்த்தவர்களால் எது உண்மையான சிரிப்பு, எது போலியான சிரிப்பு என்பதை பெருமளவு சரியாக இனம் காண முடிந்திருக்கிறது. இதற்குக் காரணம் உண்மையான சிரிப்பில் இருக்கக் கூடிய சில தனித்துவமான வெளிப்பாட்டுத் தன்மைகள்தான் என்கிறார்கள்.

"...மனம் கருப்பா வெளுப்பா என்பதை எடுத்துக் காட்டும் கண்ணாடி சிரிப்பு.." என எமது கலைவாணர் அன்றே பாடி வைத்தார். இவர்கள் இப்போதுதான் ஆராய்கிறார்கள் என எண்ணுகிறீர்களா? இப்பொழுது நவீன கருவிகளின் உதவியுடன் விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்த முடிந்திருக்கிறது. ஆனால் ஆதி மனிதனால் கூட உளம் நிறைந்த சிரிப்பையும், வெளிப்பூச்சுச் சிரிப்பையும் தெளிவாக இனம் காண முடிந்திருக்கிறது என்பது உண்மைதான்.

இந்த ஆய்வின் மற்றொரு பகுதியும் சுவாரஷ்யமானது. இது தரும் செய்தி மேலும் கவனத்திற்குரியது. அச் செய்தி என்ன? போலிச் சிரிப்பை துருவி ஆராயும் பார்த்திருக்கும் மனம். 'கவனம்' போலியாகச் சிரியாதீர்கள். உங்களுடன் உரையாடிக் கொண்டிருப்பரின் மூளையானது ஏன் இவர் அவ்வாறு போலிச் சிரிப்பில் இறங்கியிருக்கிறார் என்பதை கூர்மையாக ஆராயும். அவரது உள்ளெண்ணம் என்ன என்பதை பகுத்தறிய முனையுமாம்.

இதை எவ்வாறு கண்டறிந்தார்கள். fMRI (Functional magnetic resonance imaging) ஸ்கான் மூலம்தான். இரண்டு விதமான சிரிப்புகளையும் அவதானித்துக் கொண்டிருந்தவர்களின் மூளையின் செயற்பாடுகளை நுணுக்கமாக ஆராயப்பட்டது. வெளிப்படையாகத் தெரியும் மனித நடத்தையின் உள்நோக்கத்தைக் கண்டறியும் மூளையின் குறிப்பிட்ட பகுதியானது போலிச் சிரிப்பை அவதானித்துக் கொண்டு இருந்தவர்களில் அதீதமாகச் செயற்பட்டதாகக் கண்டறியப்பட்டது. போலிச் சிரிப்பிற்கான காரணத்தைத் தேடுவதற்காக அந்தப் பகுதி அதிகமாக உழைக்க நேர்ந்திருக்கிறது. ஆம் மனம்விட்டுச் சிரிப்பது மற்றவர்களை சந்தேகப்பட வைக்காது, உளம் மலர வைக்கும். அதே நேரத்தில் போலிச் சிரிப்பானது மற்றவர்களின் மூளையைச் சிந்திக்க வைக்கும்.

போலிச் சிரிப்பு கேடானதா?
நாம் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போது சிரிப்பதானது நாம் மகிழ்ச்சியுடன் இருப்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர்களை விரும்புகிறோம் என்பதையும் நாம் அவர்களோடு மனதார இணைந்திருக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. அதேவேளை வலிந்து சிரிப்பதானது கேடானது என்றும் சொல்ல முடியாது. அது மற்றவர்களுக்குப் போலியாகத் தெரிந்தாலும் அதற்குள் மகிழ்ச்சியளிக்க வேண்டும் என்ற நேர்சிந்தனைச் செயற்பாடு இருப்பதை நினைவு கொள்ள வேண்டும்.

மனித இடைவெளிகளை நிரப்புவது சிரிப்பு

(30ஆம் பக்கம் வருக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரா. சம்பந்தன்

# காலத்தின் கண்ணாடி

அது சங்கம் மருவிய காலத்துத் தமிழ் உலகம்' அப்போது அந்தப் பெண்ணுக்குப் பன்னிரண்டு வயது' அம்மா சித்திராபதி என்று தெரியும்' அப்பா யாரென்று அம்மாவுக்கே தெரியாத போது அவளுக்கு எப்படித் தெரியும்? அதற்காக அந்தக் குடும்பம் வெட்கப்படவில்லை' குல தர்மம் என்று ஏற்றுக் கொண்டார்கள்'

ஏழு ஆண்டுகள் அம்மா படிக்க வைத்தாள்' மகளும் படித்தாள்' இன்றைய பெண்ணியம் பேசுபவர்கள் தோன்றுவதற்கு முதல்' அழகில் சிறந்த அந்தப் பெண் நாட்டியக் கலை பயின்றாள். அரச சபையிலே மட்டும் ஆடும் வேந்து இயல் நடனமும் பொது மேடைகளில் ஆடும் பொதுவியல் நடனமும் கற்றுக் கொண்டாள்'

நடனத்துக்கு தேவையான சங்கீதப் பாடல்களைக் கற்றுக் கொண்டாள்' அக்காலத்துத் தூக்குத் துணிவு என்ற தாள வகைகளையும் உணர்ந்து கொண்டாள்' யாழிலே அழகிய பாடல்களை இசைக்கும் திறமை பெற்றாள். புல்லாங்குழலும் வாசிக்கத் தெரிந்து கொண்டாள்'

உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருப்பதற்காக தினமும் பந்தடித்து விளையாடி மெலிந்தாள்' சமையல் நூல்களைப் படித்து அழகாக இருப்பதற்கு ஏற்ற உணவுகளைச் சமைப்பதற்கும் கற்றுக் கொண்டாள். முக அழகிற்குப் பயன்படும் நிறக் கலவைகளை எப்படித் தயாரிப்பது அதை எப்படிப் பயன்படுத்துவது என்பதெல்லாம் அவளுக்குத் தெரியும்'

ஒரு படுக்கை அறையை எப்படி அழகுபடுத்துவது? கால நிலைக்கு ஏற்றவாறு எப்படி நீராடுவது? நீரிலே எவற்றையெல்லாம் கலந்து பயன்படுத்தி உடலை மெருகூட்டுவது என்பதும் அவளுக்குத் தெரியும்' இன்றைய யோகாவை அன்று அறுபத்து நான்கு கரண பேதங்களாகக் கற்றுத் தினமும் பயிற்சி செய்து வந்தாள்.

பிறர் பேசும் பேச்சின் உள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு தன்னைக் காத்துக் கொள்வதில் அவள் கெட்டிக்காரி' வசீகரமான குரலில் அழகாகப் பேசுவாள்' அழகாக ஓவியம் வரைவாள்' பூக்களைக் கொண்டு மாலை கட்டவும் தெரியும்' மணிகளைக் கோர்த்து ஆபரணங்கள் செய்யத் தெரியும்' கணிதமும் ஏனைய கலைகளையும் பாடசாலையில் கற்றாள்' அதன் பின்பு நாடக மகளிருக்கு என்று எழுதப்பட்ட நடிப்புக் கல்வி பற்றிய நூல்களை உயர் வகுப்பிலே படித்து முடித்துக் கொண்டு அரச சபையிலே நாட்டிய அரங்கேற்றம் செய்யப் போனாள் அந்தப் பேதை அம்மாவின் ஆசைக்காக' ஆடினாள்' மன்னன் புகழ்ந்தான்' சபை புகழ்ந்தது. ஆயிரத்து எட்டுக் களஞ்சு பொன் சன்மானம் கிடைத்தது' தலைக்கோலி என்ற நாட்டிய மேதைப் பட்டம் கிடைத்தது' பச்சை மாலை கிடைத்தது'

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள நினைத்தாள் அம்மா' அரசாங்கத்தால் தேசிய விருது வழங்கப்பட்ட என் பெண்ணை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் தந்தால் கட்டித்தருவேன் என்று செய்தி பரப்பினாள் ஊரில்' நடிகையைப் பொருள் கொடுத்து வாங்க யார் வருவார்கள்? அன்றும் தொழில் அதிபர் தான்'

பணத் திமிரால் கட்டிய மனைவியை விட்டு பொன் கொடுத்து வாங்கினான் அவளை' தந்த காசிற்கு தரமான சுகம் கொடுத்தாள் அவள்' கடற்கரை எல்லாம் கொண்டு திரிந்தாள்' நீராட்டி மகிழ்ந்தாள்' யாழ் மீட்டிப் பாடினாள்' ஆடிக் காட்டினாள்' பதினொரு ஆடல்களை' கூடினாள்' ஊடினாள்' திரும்பவும் கூடினாள்'

தேன் கசந்தது தேடிக் கொண்வனுக்கு' பிரிந்து போனான்' என்ன செய்வது அவள்' மண்டியிட்டுக் கெஞ்சினாள்' மாற்றம் வரவில்லை' விலை கொடுத்து சுவை பார்த்த விளைவு கையில் மணிமேகலை ஒரு பெண் குழந்தையோடு துறவு வாழ்க்கைக்குப் போனாள் அந்தப் பெண்' அவள் வேறு யாருமல்ல. சிலப்பதிகாரத்து மாதவிதான்' ஒரு கலைக் கோவிலாக உருவெடுத்து இறுதியிலே தன் திறமை எதுக்குமே பயன்படாமல் ஓரங்கட்டப்பட்ட அவள் வரலாறு இதயத்தைப் பிழிவதாகும்'

வேத்தியல் பொதுவியல் என்று இரு திறத்து
கூத்தும் பாட்டும் தூக்கும் துணிவும்
பண்யாழ்க் கரணமும் பாவைப் பாடலும்
தண்உமைக் கருவியும் தாழ் தீங்குழலும்
கந்துகக் கருத்தும் மடை நூல் செய்தியும்
சுந்தரச் சுண்ணமும் தூயநீர் ஆடலும்
பாயல் பள்ளியும் பருவத்து ஒழுக்கமும்
காயக் கரணமும் கண்ணியது உணர்தலும்
கட்டுரை வகையும் கரந்துறை கணக்கும்
வட்டிகைச் செய்தியும் மலர் ஆய்ந்து தொடுத்தலும்
கோலம் கோடலும் கோவையின் கோப்பும்
காலக் கணிதமும் கலைகளின் துணிவும்
நாடக மகளிர்க்கு நன்கணம் வகுத்த
ஓவியச் செந்நூல் உரை நூல் கிடக்கையும்
கற்றுத் துறை போக்கிய பொற்றொடி நங்கை'

அது மணிமேகலை தரும் சான்றிதழ் மாதவிக்கு' அவளை இன்றைய நடிகைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் இன்று சில நடிகைளின் வாழ்வில் ஏற்பட்ட அத்தனை சோதனைகளையும் அன்றே மாதவி அனுபவித்து இருக்கிறாள்'

அழகு இருந்தது' கல்வி அறிவு இருந்தது' ஆனால் அம்மாவின் பணத்தாசைக்காக ஏற்கனவே மணம் முடித்தவன் என்றும் பார்க்காமல் வசதியான கோவலனோடு தொடர்பு வைத்து இன்னொருத்தியின் வாழ்க்கையைச் சீரழித்து விட்ட அவப் பெயரோடு சொத்து இழந்து கலை உலகை விட்டு ஒதுங்க வேண்டிய நிலை ஏற்பட்டது மாதவிக்கு' அவளைப் போல அவமானப்பட்டு வேதனையுடன் திரை உலகை விட்டு ஒதுங்கிய பல பெண்களை இன்றும் கலை உலகில் காண்கின்றோம்'

சாமியார் தொடர்பால் மந்திரிகள் தொடர்பால் பணக்காரர் தொடர்பால் அம்மாவின் தொல்லையால் அவலப்படுவது இன்றைய நடிகைகள் மட்டுமல்ல. அன்றைய மாதவியும் தான்' தவறான குடும்பத்தில் இருந்து கலை உலகிற்கு வந்து ஒருவனுடனே மட்டும் வாழ்ந்து முடிவில் துறவு என்ற நல்ல வழிக்குப் போனாள் மாதவி' நல்ல குடும்பத்தில் இருந்து கலை உலகிற்கு வந்து பலரோடு கலந்து தவறான வழியில் ஒதுங்கிக் கொண்டவர்கள் இன்றைய சில நடிகைகள்'

இன்று நாம் காண்பது உண்மையென்றால் அன்றைய இலக்கியச் செய்தியும் உண்மைதான்' ஏனெனில் சொல்லப்பட்ட செய்திகள் ஒன்றாகத்தான் இருக்கின்றன. இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடிகள் என்பது இது தானோ?●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# பொறுப்புக் கூறுதல்

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னர், அங்கே 140,000 ற்கும் அதிகமான உயிரிழப்புக்கள் நடந்திருப்பதாக மன்னார் ஆயர் அதிவண இராயப்பு யோசப் கூறியபோது, எந்தவொரு சக்தியும் அதைப் பெரிதுபடுத்த மறுத்தது. 40,000 மக்கள் இறந்திருக்கலாமென ஓரிரு குரல்கள் எழுந்தபோதுகூட, அதை சிறீலங்கா அரசு வெறும் கட்டுக்கதையென உதாசீனம் செய்தது. மிகுந்த சிரத்தையுடன் முன்னெடுக்கப்பட்ட மக்கள் மீட்பு என்றும், உலக ஜனநாயகத்திற்கு ஒரு முன்னுதாரணமான மக்கள் வெளியேற்றம் என்றும், ஒரு நாட்டில் நிலவும் பயங்கரவாதத்தை முதல்தர ஜனநாயக விழுமியங்களுக்கமைவாக அந்நாட்டு அரசு எப்படி முடிவுக்குக் கொண்டுவருவது என்பதை சீராக செயற்படுத்திக் காட்டிய ஒரு அரசு என்றும், சிறீலங்கா தனக்குத் தானே புகழாரம் சூட்டிக்கொண்டது.

தங்கள் இராஜாங்க நலனுக்காக வெட்டியாய் ஒத்தூதும் ஊதுகுழல் நாடுகள் பலவும், சிறீலங்காவின் சுய புகழாரத்தை கண்ணை மூடிக்கொண்டு மெட்டமைத்துப் பாட, அதுவே இறுதியில் ஐ.நா.வின் பாராட்டு அறிக்கையாக, சிறீலங்காவின் வெற்றிக்கான அறிக்கையாக, ஐ.நா.விடமிருந்து பதில் வந்தது.

இலங்கைப் பிரச்சனையை இணைந்து கையாளும் குழுவாக, இணைத்தலைமை நாடுகளின் கூட்டணி என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்ட அமெரிக்கா, நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன, நடந்த அனைத்தையும் அறிந்திருந்தும், தங்கள் சுய தேவைகளுக்காக, இந்த நாடகங்களை-யெல்லாம் மௌனமாக இரசித்துக் - கொண்டிருந்ததுடன், எதிர்க்கத் திராணி-யின்றி கௌரவமாக விலகிநின்றி வேடிக்கை பார்த்தன.

அத்தனை ஆதாரங்களையும் தங்களிடம் கைவசம் வைத்துக்கொண்டு, வாளாநின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மேற்குலகின் நாடுகள் பல, தற்போது வெளியான அறிக்கையில், சிறீலங்காவில் இடம்பெற்ற இனப்படுகொலையைத் தடுக்க ஐ.நா. தவறிவிட்டது என்று குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்த்தபின்னர், அங்கும் இங்கும் சற்றே காட்டமான கருத்துக்களைக் கூற ஆரம்பிக்கின்றன.

இருப்பினும், இனப்படுகொலை செய்த கொடிய சிங்கள அரசை இதுவரை நேரடியாகத் தட்டிக் கேட்கும் நிலைக்கு இணைத்தலைமை நாடுகள் எவையும் முன்வரவில்லை என்பதை நாம் அலட்சியம் செய்ய முடியாது. இன்னும் சொல்லப்போனால், கனடிய அரசைத் தவிர, வேறெந்த நாடும் சிறீலங்காவிற்கு இதுவரை ஒரு இராஜாங்க அழுத்தத்தைக் கொடுக்க முன்வரவில்லை என்பதே உண்மை.

இந்நிலையில், ஆங்கிலப் பழமொழி ஒன்று சொல்வதைப் போல், 'அனைத்து முட்டைகளையும் ஒரே கூடையில் போடுவது' 'all eggs in one basket' என்ற கதையாக, தமிழர் தரப்புக்கள், தங்கள் கவனத்தையும் அழுத்தத்தையும் இராஜதந்திர எதிர்ப்புக்களையும் அனைத்துத் தரப்பின் மீதும் போடாது, ஏதாவது ஒன்றின் மீது மட்டுமே காட்ட முற்படுவதும், பின்னர் ஒன்றிலிருந்து மற்றப் புள்ளி நோக்கி அனைத்துக் கவனத்தையும் திருப்புவதுமே இதுவரை நடக்கிறது.

ஒரு சமயம் லிபரல் கட்சி மட்டுமே தமிழருக்கான கட்சி என்று கூப்பாடு போட்டு, அத்தனை முட்டைகளும் கூடையோடு உடைந்து போனதால் இறுதியில் சோர்ந்து போனதும், என்.டி.பி. தான் என்று குய்யோ முறையோ என்று கத்திவிட்டு, கப்பென்று பின்னர் அடங்கிப் போனதும், ஐ.நா. பார்த்துக் கொள்ளும் என்றும், சரத் பொன்சேகா நீதி கொடுப்பார் என்றும், கூட்டமைப்பு மட்டுமே சித்தம் என்றும், இப்போது கன்சவ்வேட்டிவ் மட்டும் தான் என்றும், அவ்வப்போது ஒரு புள்ளி நோக்கியே எம் கவனம் நிலை கொள்கிறது.

தற்போது, தமிழர் தரப்பின் கோபமும், கூச்சலும், உச்சக்கட்ட எதிர்ப்பும், ஐ.நா. மீது திரும்பியிருக்கிறது. இது நியாயமானது என்றாலும், தன்மீதே அதிகபட்சத் தவறு இருக்கிறது என்பதை அவதானிக்கும் ஐ.நா. அந்த விவகாரத்தைப் பின்தள்ளி இழுத்தடிக்க நாங்களே வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்து விடலாம். இனப்-படுகொலையைத் தடுத்து நிறுத்த ஐ.நா. தவறியது உண்மையெனினும், அடிப்படையில் இனப்படுகொலையைப் புரிந்த சிறீலங்கா ஆட்சி மீதே எமது அழுத்தங்கள் தொடர்ந்தும் நிலை கொள்ளும் தேவை இருக்கிறது.

தவறான புள்ளி மீது அனைத்துக் கவனத்தையும் செலுத்தி அழுத்தம் கொடுப்பது தவறு என்பது உணரப்படுதல் அவசியம். சில சக்திகள் ஐ.நா. இறுதி அறிக்கை மீது அழுத்தம் கொடுக்கும் அதே பட்சத்தில், இணைத்தலைமை என்ற பெயரில் களேபரம் பண்ணிய ஏனைய பல சக்திகள் மீதும், இனஅழிப்பிற்கு இரகசிய அனுசரணையும் ஆதரவும் உத்வேகமும் வழங்கிய இந்தியா போன்ற சக்திகள் மீதும், அழுத்தங்களைத் தொடர்வது அவசியம்.

அழுத்தம் கொடுக்கப்பட வேண்டிய அத்தனை கூடைகளிலும் எமது முட்டைகளை வைத்துக்கொண்டு விவேகமாகப் பயணித்தால், சில கூடைகளாவது இலக்கை அடையும்வரை பயணிக்கும். தமிழர் தரப்பு அழுத்தங்கள், ஐ.நா. மீது ஒட்டுமொத்தமாய்த் திரும்புவதை, சிங்கள அரசும் விருப்புடன் பார்க்கும். ஐ.நா. எடுக்கும் நடவடிக்கை எதுவும், சிறீலங்கா அரசு மீது மட்டுமன்றி ஐ.நா. அவை மீதும் அழுத்தத்தைக் கொடுக்கும் வகையில் நகர்த்தப்படுவதையே சிங்கள அரசு விரும்புகிறது. இதன்மூலம், எந்த நடவடிக்கையையும் ஐ.நா. அவசரமாக எடுக்காமல், ஏனைய பல முன்னிலை சர்வதேச விவகாரங்களுக்கு தமது கவனத்தைத் திருப்பி, சிறீலங்கா விவகாரம் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுவதை சிங்கள அரசு தந்திரமாக உந்தித் தள்ளவே முயற்சிகளை மேற்கொள்கிறது.

நேரத்துடன் இதைப் புரிந்து கொண்டு, சிங்கள அரசின் கபடநாடகங்களுக்கு விலை போகாமல், பிரதான அழுத்தத்தை, இனப்படுகொலை புரிந்த சிறீலங்கா அரசு என்ற புள்ளி மீதே தொடர்ந்தும் நிலை கொள்ள வைப்பதே, விவேகமான பயணிப்பாக அமையும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)



# குறிக்கோள் - இலட்சியம்

இருசொற்களும் ஒரே பொருள் உடையன. மனித வாழ்வின் உயரிய இலட்சணங்கள். இந்த இலட்சணங்களை அலட்சியம் செய்யக்கூடாது. வாழ்வின் இறுதி இலக்குகளை மனிதம் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆத்மீகச் செல்வர் தொட்டு அரசியல் ஞானிகள்வரை உயரிய சிந்தனையாளர்களோடு சாதாரண மனிதனின் ஒழுகலாற்றின் இரு கடைப்படிகள் தான் இலட்சியமும், குறிக்கோளும் கொள்கை கோட்பாடுகளின் சாதனை உயர்ந்த இலட்சியங்களாம்.

மனிதம் ஒரு கொள்கை கோட்பாடின்றி வாழ முடியாது. ஒரு கட்டுக்கோப்பான உச்சவாழ்வின் அங்கமே இலட்சியம். இப்பிரயோகம் எடுத்தாளப்படும் இரு இடங்களை இங்கே தருதும்.

சத்தியமே இலட்சியமாய்க் கொள்ளடா
உனை உணர்ந்து தலைநிமிர்ந்து செல்லெடா
(திரைஇசைப் பாடல்)

கொன்றேன் பல்லுயிரைக்
குறிக்கோ ளொன்றிலாமையினால்,
என்றேனு மிரந்தார்க்
கினிதாகவு ரைத்தறியேன்,
குன்றோய் மேகமதிர்
குளிர்மாமலை வேங்கடவா,
அன்றே வந்தடைந் தேன்
அடியேனை ஆட்கொண்டருளே
திருமங்கை மன்னன். (பெரிய திருமொழி 1:9.2)

பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க் கோதை மார்கம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது
கேட்டேன்
சேலுவாம்பழன வேலித் திருக்கொண்டீச் சரத்துளானே
(அப்பர் திருமுறை 4 – 44.9)

நாவேந்தரும் பாவேந்தருமான திருநாவுக்கரசு சுவாமிகளை அப்பர் என்றே அழைப்பர். பிரமச்சாரியான அவர் திருத்தாண்டகம் என்னும் பாவினத்தை உருவாக்கியவர். தொண்டினாற் கிழம் ஆனவர். அந்தப் பெரிய மானுடரே “குறிக்கோள் இல்லாமல் வாழ்ந்து கெட்டுப் போனேன்” என மனம் நொந்து பாடுகின்றார்.

இவ்வண்ணமே மன்னனாய் வாழ்ந்து நாராயணனை நெடுந்தாண்டகம் பாடிப் பரவிய மகான் திருமங்கை மன்னன். அவர்கூட “குறிக்கோள்” என்ற இராசபாட்டையில் என்னை வழிநடத்தாமல் கெட்டுப் போனேன் என வாய் விண்டு பேசினார்.

இவற்றை நாம் படிக்குங்கால் நாம் எந்த அளவு தாழ்ந்து காணப்படுகின்றோம். உலகோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் சிறியவர்களாகவே காணப்படுகிறோம். இந்த மகான்களே இலட்சிய வாழ்வுக்காகப் போராடி இருப்பதினின்று, நமக்குக் கிடைத்த படிப்பினை நாம் பூச்சியர்களாகவே திகழ்கின்றோம் என்பது. நாம் ஒரு சாதாரண பிரசைகள்.

மானுடத்தின் உச்சஸ்தாயியை எட்டிப்பிடிக்கத் தவறி விட்டோமே என்ற ஏக்கம் எம்மை வருத்தத்தான் செய்கிறது.

இதே கருத்தைப் பட்டினத்தடிகள் ஒரு சிறுநிகழ்வு மூலம் (கதை) எமக்கு விளக்குகின்றார். தோழிப் பெண்களோடு (ஒரு இளவாலைப் பெண்) தண்ணீர் கொண்டு வர குடத்தோடு போகிறாள். எல்லாரையும் போல நீரை நிரப்பினாள். சும்மாட்டின் உதவியால் தலையிலே வைத்துவிட்டு ரொம்பக் கவனமாகத் தலையில் இருந்த நீர்க் குடத்தைக் கொண்டு போகும் குறிப்போடு கைகளை வீசி உல்லாசமாய்ப் போய், வெகு லாவகமாகத் தண்ணீர்க் குடத்தை இறக்கி உரிய தண்ணீர்க் குடத்தடியில் வைத்துவிட்டு நிம்மதியடைகின்றாள்.

இத்தனைக்கும் தோழிகளோடு உல்லாசமாகப் பேசி, கைகளை வீசி நடந்து கொண்டு வந்தாலும் அக்கன்னிப் பெண்ணின் கவனமெல்லாம் தண்ணீர்க்குடம் விழாமல் இருப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தது என்பதை பாட்டாலேயே (நமக்கும்) புரிய வைக்கிறார்.

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும் மோனத்தே - வித்தகமாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதி மனம் நீர்க்குடத்தே தான்.
பட்டினத்தார் பாடல் 397

தண்ணீர்க் குடத்தைத் தலையிலே சுமந்து கொண்டு சாதுரியமாய்ப் பிரிந்து (தனிமையாக) விளையாடிக் கொண்டு கைகளை வீசிக் கொண்டு வந்தாலும் அப்பருவப் பெண்ணின் இலக்கு எல்லாம் தண்ணீர்க் குடத்திலேதான் நிலைத்து இருக்கும். அஃதே போல எந்த வேலை செய்தாலும், எவ்வித துன்பங்களையும் அனுபவித்தாலும், ஞானிகளின் மனம் மோனநிலையிலேதான் இருக்கும். தாமரை இலையிற் தண்ணீர்போல் வாழ்வர் துறவிகள்.

எனவே அவர்கள் மனம் இறைவன் இடத்தேதான் குவிந்து இருக்கும். எதைப்போல என்றால் நீர்க்குடத்தைச் சுமந்துவரும் பெண் ஒருத்தி விளையாடிய வண்ணம், கைகளை வீசிக் கொண்டு நடப்பினும் அவளின் மனம், தான் சுமந்து கொண்டுவரும் குடத்திலேயே இருப்பது போன்றே இருக்கும். இந்த உண்மை ஒவ்வொருவர்க்கும் பொது.

காந்தியடிகளின் இலக்கு முழுவதும் சத்தியத்திலும், சுதந்திரத்திலும்தான் இருந்தது. விநோபாவின் எண்ணமெலாம் பூதான இலக்கையே மையமாய்க் கொண்டது. பெருந்தலைவரின் இலட்சியம். பிரமச்சரியத்திலும், பாரதநாட்டின் சுதந்திரத்திலும் இருந்தது. ஈ.வேரா சீர்திருத்தத்தையே எதிர்கொண்டார்.

ஈழமண்ணில் நாவலரின் இலட்சியம் முழுமையும் பர சமயங்களினின்று சைவத்தைப் பேணுவதாய் அமைந்தது. இவ்வண்ணமே ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒவ்வொரு தொழிலாளியும் இலட்சியத்தைப் பூர்த்தி செய்ய முயல வேண்டும். ஆக நாம் ஒவ்வொருவரும் இலட்சியவாதிகளாய் வாழ்வோமாக.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகவன்-டிரேஷ் அலுவலக ஆரம்ப வைபவம்







ஸ்கோஷியா வங்கியின் Morgage Development Manager திரு. ராகவன் இராமநாதன் மற்றும் HomeLife/Future வீடு விற்பனை முகவர் டிரேஷ் கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் கூட்டு அலுவலக திறபபு வைபவத்தினை முன்னிட்ட விருந்து வைபவம் அண்மையில் ஸ்காபரோ கொன்வென்ஷன் மண்டபத்தில் இடம்பெற்றது. சட்டத்தரணிகள், வங்கியாளர்கள், நிதித்துறை/அடமான ஆலோசகர்கள், வீடுவிற்பனை நிறுவன அதிபர்கள், முகவர்கள், நண்பர்கள் என பெருமளவானோர் இவ்வைபவத்தில் பங்குபற்றி வாழ்த்துக் கூறினர். வைபவத்தில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு பார்க்கலாம்.●

# கனடா தமிழர் வர்த்தக சம்மேளனம்



இரண்டு தசாப்தங்களைப் பூர்த்தி செய்த கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் புதிய வருட நிர்வாகிகள் தெரிவு கடந்த மாதம் நடைபெற்றது. இம்முறை பல பதவிகளுக்கும் பலத்த போட்டி இடம்பெற்றது. இறுதியில் திரு. சிறிதரன் துரைராஜாவைத் தலைவராகவும், அஜித் சபாரட்ணத்தை உபதலைவராகவும் கொண்ட புதிய குழு தெரிவு செய்யப்பட்டது புதிய நிர்வாகிகள் கூட்டாக எடுத்த படம்.●

# Inforce Life Financial Services அலுவலகத் திறப்புவிழா



நிதித்துறைச் சேவையில் நீண்ட கால அனுபவம் கொண்ட சந்திரன் இராசலிங்கத்தின் 'Inforce Life Financial Services Inc..' நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழா கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்றது. ஸ்காபரோ மில்னர் பிசினஸ் பத்தாம் இலக்கக் கட்டிடத்தின் 707 முகவரியிலான இந்த அலுவலகத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபைஈசன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதன்போது எடுக்கப்பட்ட படத்தில் நாடாளுமன்ற உறுப்பினருடன் நிறுவன நிர்வாக இயக்குனர் சந்திரன் இராசலிங்கம் காணப்படுகிறார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலையும் தமிழரின் பேராற்றல் வடிவ



முன்னைய ஆண்டுகள் போலவே மாவெழுச்சியுடன் பல்லாயிரம் மக்கள் கலந்துகொண்ட இவ்வருட மாவீரர் நாள் நிகழ்வு கனடாவின் மார்க்கம் நகரில் நடைபெற்றது. கனடாத் தமிழர் நினைவெழுச்சி அகவத்தினால் வழமைபோல் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மாபெரும் மாவீரர் நினைவு மண்டபத்தில் அதிகாலை முதல் அமர்வு ஆரம்பமாகியது. கடுங் குளிரையும் பொருட்படுத்தாது அவ் வேளையிலேயே பெருமளவு சிறாரும், மக்களும் வருகை தந்திருந்தனர்.

ஈகச்சுடர் ஏற்றல், கனடிய தேசியக் கொடியேற்றம், தமிழீழ தேசியக் கொடியேற்றம், அமைதி வணக்கம், துயிலும் இல்லப்பாடல், கார்த்திகைப் பூ மலர் வணக்கம் என்பவை முறைப்படி நடைபெற்றன. மக்கள் சாரை சாரையாக வந்து மலர் வணக்கம் செய்தனர். தொடர்ந்து எழுச்சிக்கலை நிகழ்வுகள் நடைபெற்றன. இதேபோன்று இரண்டாவது அமர்வு மதியம் 12 மணிக்கும், மூன்றாவது அமர்வு பிற்பகல் 3:30 மணிக்கும் இறுதி அமர்வு இரவு 7 மணிக்கும் ஆரம்பமாகின.
























ஒளிப்படங்கள்: குணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வமான நினைவெழுச்சி நாள் - 2012 : ரொறன்ரோ



தொடர்ச்சியாக 15 மணித்தியாலங்களாக நடைபெற்ற நிகழ்வுகளின் போது மக்கள் தமக்கு வசதியான நேரத்தில் தமது மண்ணின் வீரமறவர்க்கான வணக்கத்தை மண்டபத்தை நிறைத்து தொடர்ச்சியாக செலுத்திய வண்ணமிருந்தனர். பல்லாயிரத்தில் இருக்கை வசதிகள் அமைந்த போதும் அலை மோதிய மக்கள் வெள்ளத்தால் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தமது இருக்கையை ஏனையவர்களுக்கு ஒதுக்கி மக்கள் மண்டபத்தை விட்டு வெளியேறியமை பிற்பகல் முதல் நிறைவு வரை முழுமையாக அவதானிக்கப்பட்டது.

சிங்கள அரச பயங்கரவாதம் எல்லை கடந்து புலம்பெயர்ந்த தளங்களிலும் அச்சுறுத்தல் விட ஆரம்பித்துள்ள நிலையில் தங்கள் உரிமைகளுக்காவும், தங்கள் தாயக உறவுகளுக்காவும் முழுமையாக போராட்டத்திற்கு கனடியத் தமிழ் உறவுகள் மௌனம் கலையும் பேராற்றலின் வடிவமாக இவ்வருட நினைவெழுச்சி நாள் அமைந்திருந்தது●.



























தணா - செய்தி.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள் 2012 - மொன்றியல்











நவம்பர் 27 ஆம் திகதி மொன்யலில் உணர்வுபூர்வமாக நடைபெற்ற மாவீரர் நினைவெழுச்சி நாளில் எடுக்கப்பெற்ற சில ஒளிப்படங்கள்.

# 'மாவீரன்' தளபதி பரிதிக்கு கனடாவில் வீரவணக்கம்








கடந்த மாதம் எட்டாம் திகரி பாரிஸ் நகரில் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் நாட்டின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் தளபதி பரிதிக்கு கனடியத் தமிழர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட வீரவணக்க நிகழ்வு ஸ்காபரோ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நவம்பர் 11ஆம் திகதி நடைபெற்றது. அதன்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்

# எம் தோழி பரிசேலோர் எம் பாவாய்! 61



மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் 8 ஆம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளது எனப் பார்த்தோம். அவரால் எழுதப்பட்ட பெரும் நூல்கள் இரண்டு திருவாசகம் மற்றும் திருக்கோவையார். இவற்றுள் திருவாசகம் என்பது ஒரு பெரிய தொகுப்பு நூல். இதில் மொத்தம் 51 பாடல்நூல்கள் உள்ளன. அவற்றுள் பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடிய பதிகநூல்களே அதிகம். நீண்ட பாடல்களாக விளங்குபவை சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம் ஆகியவை. இவற்றில் பல பாடல்கள் புகழ்பெற்றவையாய் விளங்கிடினும் மிக அதிகமாக வழங்கப்படுபவை, சிவபுராணமும் திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் தான். திருவெம்பாவை, 900 ஆயிரம் ஆண்டுகளாக சைவக்கோயில்களில் ஓதப்படும் பெருமையுடையது. "தமிழ் மந்திரம்" என்ற பெயரில் அந்தக்காலத்தில் அது கடல் கடந்து சயாம் நாட்டிற்குச் சென்றிருக்கிறது. அரசனுக்கு முடிசூட்டும் காலத்திலும் சில திருவிழாக் காலத்திலும் சயாமியர் திருவெம்பாவையை ஓதுகின்றனர். ஒவ்வொரு திருவெம்பாவைப்பாடலின் முடிவிலும் "ஏலோர் எம்பாவாய்!" என்ற சொற்றொடர் காணப்படும். அது மருவி இப்போது சயாமியரால் " லோரி பாவாய்" என்று பாடப்படுகிறது.

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த வள்ளலார் உள்ளத்தை மாணிக்கவாசகரின் திருவாசகம் கொள்ளை கொண்டிருக்கிறது.

வான்கலந்த மாணிக்கவாசக' நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ்சாற்றினிலே
தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து,என்
ஊன்கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே'
வாட்டமிலா மாணிக்க வாசக நின் வாசகத்தை
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே'

என வள்ளலார் புகழாரம் சூட்டி மகிழ்கிறார். "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற பொன் மொழியும் உண்டு.

மாணிக்கவாசகர் திருவாதவூரில் பிறந்தவர். இவரது இயற்பெயர் திருவாதவூரர். இவரது காலம் பற்றிய பல கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இவர் 63 நாயன்மார்களுள் ஒருவராக இல்லை. மேலும் சுந்தரரின் திருத்தொண்டர் தொகையில் இவர் இடம் பெறவில்லை. எனவே இவர் சுந்தரர் காலத்திற்கு பிற் பட்டவராக இருக்க வேண்டும். ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது பொதுவான முடிவு. அமாத்ய பிராமணர் வகுப்பில் பிறந்த இவர் இளம் வயதிலேயே அனைத்துக் கலைகள், மொழியில் புலமை பெற்றுத் திகழ்ந்தார். அமாத்யர் என்பது அமைச்சர் என்பதன் வடமொழிச் சொல்லாகும். இந்தக் குலத்தில் பிறந்தவர்கள் அமைச்சர்களாக இருந்து வந்தார்கள். அதை ஒட்டி இவரும் அரிமர்த்தன பாண்டியனின் அவையில் முதல் அமைச்சராக இருந்தார். இளமையில் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால் பாண்டிய மன்னன் அரிகேசரி அல்லது அரிமர்த்தன பாண்டியன் தென்னவன் பிரமராயர் என்னும் உயரிய விருதை அளித்துப் பெருமை படுத்தினான். அரசனுக்கு அமைச்சராக இருந்தும் அவர் ஆன்மீக நாட்டம் உடையவராகவே இருந்தார்.

சிவனே குருவாக வந்து மாணிக்கவாசகரை தடுத்தாட் கொண்டார் என்பது கதை. மார்கழி மாதத்தில் அவர் சிவனைக் குறித்துத் தீந்தமிழில் பாடிய திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் ஓதப்படுகின்றன.

திருவண்ணாமலையில் இவர் பாடிய பாடல்களே திருவெம்பாவை எனப்படுகின்றன. இப்பாடல்களில் தன்னை ஒரு பெண்ணாகப் பாவனை செய்து மார்கழி மாதக் காலையில் சிவனைக் குறித்துப் பாடுவது போல் பாடியுள்ளார். திருவெம்பாவை என்ற சொல்லில் திரு - தெய்வத் தன்மையைக் குறிக்கின்றது. எம் - என்பது உயிர்த் தன்மையை உணர்த்துகின்றது. பாவை - வழிபாட்டிற்கு உகந்த உருவம். ஆகவே திருவெம்பாவையின் திரண்ட பொருள், தெய்வத்தன்மை வாய்ந்த திருவருள் எங்களோடு இணைந்து இயங்குகின்றது. எங்களுக்குத் துணையாய் நிற்கின்றது. நாங்கள் செய்யும் நோன்பினைப் பாவைத் திருவுருவில் நின்று ஏற்கின்றது. ஏற்றுப் பயனளிக்கிறது என்பதாகும். இப்பாடல்களில் பாவை சிறப்பிடம் பெற்றதால் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் 'எம் பாவாய்' என்று அமைந்துள்ளது. ஏலோரெம்பாவாய் என்பதில் ஏலும் ஓரும் அசைகள் பாவாய் - விளித்தல். பாவை நோன்பு நோற்கும் பெண்கள் 'பாவாய்' என அழைக்கப்படுகின்றனர்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, ஆண்டாளின் திருப்பாவை இரண்டின் பாடுபொருள் ஒன்றுதான், பாடப்படும் கடவுள்தான் வேறு. மாணிக்கவாசகர் காண்பிக்கும் பெண்கள், சிவனைப் போற்றி நோன்பு நோற்கிறார்கள். கோதை நாச்சியாராகிய ஆண்டாளும் அவளது தோழியரும் கண்ணனை எண்ணிப் பாவை நோன்பு இருக்கிறார்கள். இந்த இரண்டும் ஏட்டிக்குப் போட்டியாய் பாடப்பட்டனவாக தோற்றம் அளிக்கின்றன.

இந்தப் பெண்கள் எல்லாரும் இளம் வயதினர். குறும்பும் வேடிக்கையுமாகப் பேசிச் சிரிக்கிற விளையாட்டுத் தோழிகள். ஆனால் கடவுள் பணி என்று வந்துவிட்டால், அனைவரும் தீவிரமாகி விடுகிறார்கள், "நாளைக்குக் காலையில சீக்கிரமா எழுந்து குளிச்சுக் கோயிலுக்குப் போகணும்" என்று திட்டமிடுகிறார்கள். பாவை நோன்புக்காகச் செய்ய வேண்டியவை என்னென்ன என்று பட்டியல் போட்டுத் தயாராகி-றார்கள்.

→

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் காலை, சில பெண்கள் சொன்னபடி சீக்கிரம் எழுந்துவிட்டார்கள். மற்றவர்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அவர்களை எழுப்பிப் பாவை நோன்புக்காக அழைத்துச் செல்வதுதான் திருவெம்பாவையின் முதல் பகுதி.

திருவெம்பாவையில் 20 பாடல்கள் உள்ளன. முதல் பாட்டு:

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

ஒளி பொருந்திய நீண்ட கண்களை உடைய பெண்ணே' முதலும் முடிவும் இல்லாத அரும் பெருஞ்சோதியை யுடைய இறைவனை நாங்கள் பாடுவதைக் கேட்டும், உறங்குகின்றனையோ? உன் காது ஓசை புகாத வலிய காதோ? மகாதேவனுடைய நெடிய சிலம்பணிந்த திருவடிகளை நாங்கள் புகழ்ந்து பாடிய வாழ்த்துப் பாடல்களின் ஒலி சென்று, தெருவின் கண் கேட்ட அளவிலேயே, எங்கள் தோழி ஒருத்தி பொருமி அழுது, உடம்பை மறந்து மலர் நிறைந்த படுக்கையின் மீதிருந்து புரண்டு விழுந்து இந் நிலத்தே, ஒன்றுக்கும் ஆகாதவள் போல மூர்ச்சித்துக் கிடந்தாள். இஃது அவள் தன்மை என்ன வியப்பு' அடுத்த பாடல்

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்'

சிறந்த அணிகளை அணிந்தவளே' இரவும் பகலும் நாம் பேசும் பொழுது எப்பொழுதும் என் அன்பு, மேலான ஒளிப் பிழம்பான இறைவனுக்கு என்று கூறுவாய். இப்பொழுது அருமையாகிய படுக்கைக்கே, அன்பு வைத்தனையோ? பெண்களே' சீச்சி நீங்கள் பேசும் நகை மொழிகளில் இவையும் சிலவாகுமோ' என்னோடு விளையாடிப் பழித்தற்குரிய சமயம் இதுதானோ? தேவர்களும் வழிபடுதற்கு நாணுகின்ற தாமரை மலர் போன்ற திருவடியை அன்பருக்குக் கொடுத்தருள எழுந்தருளும் ஒளி உருவன் தில்லைச் சிற்றம்பலத்து இறைவனுக்கு, அன்பு பொருந்திய நாம் உனக்கு யார்? (வளரும்)●


பா(f)ன்ஸி
பூக்கடை
Fancy Florist
பூஜைக்
களஞ்சியம்


**Fancy Florist International Inc.**
An International Flower Shop

*We deliver Garlands, jasmine and gifts anywhere in the world on the date you select when placing orders through our three on-line Flower Shops.*

To send jasmine, garlands and gifts
Anywhere in Canada
Place the order on line at Flower shop
www. fancyflorist.ca
Phone: (416)288-1419
*In Canada, the local pick up is at*
5633 Finch Ave, East, Unit # 6,
Scarborough, Ont. M1B 5K9

To send jasmine, garlands and gifts
Anywhere in USA
Place the order on line at Flower shop
www. fancyflorist.com
Phone: (716) 838-0844
*In USA, the local pick up is at*
2119, Eggert Road
Amherst, NY, 14226

To send jasmine, garlands and gifts
Europe, Middle East, India, Sri Lanka
Singapore, Malaysia
Place the order on line at Flower shop
www.fancyflorist.in
Phone: (716) 838-0844
*In India, the local pick up is at*
12 Ghandhi St, BT Nagar,
Gerugambakkam, Chennai

*Place the order in any one of our three on-line Flower Shops to send temple garlands to your favorite temple in Canada, USA, India, Sri Lanka, Singapore and Malaysia*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நிருத்த நிறைஞர்' எட்டாவதாண்டு மட்டமளிப்பு விழா

தராதரம் பெற்ற மாணவிகளுக்கு அதற்கான சான்றிதழ் வழங்கிக் கௌரவம் செய்யப்பட்டது. கலாமன்ற அதிபரும் ஆசிரியருமான நிறைஞ்சனா சந்துருவின் ஆரம்ப உரையைத் தொடர்ந்து, 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் தலைமையில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கனடா கலை மன்ற மாணவிகளுடன், வனிதா குகேந்திரனின் கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி மாணவிகளும் 'நிருத்த நிறைஞர்' பட்டம் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து நடனத்தில் மற்றைய தரங்களில் சித்தியடைந்த மாணவர்கள் சான்றிதழ்கள் வழங்கி சிறப்புச் செய்யப்பட்டனர்.●











# உலகளாவ நடைபெற்ற இரண்டு நூல்களின் வெளியீடு









தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதியின் 'எம்மை வாழவைத்தவர்கள்' மற்றும் 'மரம் - மாந்தர் - மிருகம்' ஆகிய இரு நூல்களின் அறிமுகவிழா அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்றது. 'வெற்றிமணி' மு.க.சு சிவகுமாரன் இந்நிகழ்வைச் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த நூல்களின் வெளியீடு கனடாவில் மார்க்கத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இலங்கையிலும், பின்னர் இங்கிலாந்து பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய உட்படப் பல ஐரோப்பிய நாடுகளிலும் அறிமுக விழாக்கள் இடம்பெற்றன. ஜேர்மனி விழாவில் எழுத்தாளர் அ. கருணாகரமூர்த்தி, ஏலையா க. முருகதாசன், நகுலா சிவநாதன் ஆகியோர் உபரயாற்றினர். ஜேர்மனி விழாவில் எடுக்கப்பட்ட சில படங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளன. நூலின் சிறப்புப் பிரதியொன்றை திருமதி. சுரேஷ் நூலாசிரியரிடமிருந்து பெறுகின்றார். இந்த நூலில் இடம்பெற்ற பல ஓவியங்களை வரைந்த இலங்கை ஓவியர் ரமணியின் சகோதரி இவராவார்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB

# Computek College

BUSINESS · HEALTH CARE · TECHNOLOGY

Est. 1991

www.computek.edu



We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்













- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM
**HEAVEN CARES**
ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY
www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

*Chapel Ridge*
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng
Funeral Counsellor
**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**
Funeral Counsellor
**416-431-3600** Ext:2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high, with your thoughts



**PRO MAR Ltd.**

- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!


One stop for all your promotional needs.




**PRO MAR Ltd.**
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

## *Why think so long...?*



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

Mortgages & loans arrangements


**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# கிரிக்கெட்: இந்தியா, இங்கிலாந்து

கடந்தமுறை இங்கிலாந்து மண்ணில் சந்தித்த தோல்விக்கு, இம்முறை இந்திய அணி பதிலடி கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியா, இங்கிலாந்து அணிகள் நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றன.

பறிபோன நம்பர்-1:கடந்த ஆண்டு இங்கிலாந்து சென்ற இந்திய அணி டெஸ்ட் தொடரை 0-4 என, முழுமையாக இழந்து, நம்பர்-1 இடத்தையும் பறிகொடுத்தது. இந்தியாவுக்கு எதிரான வெற்றிக்குப் பின், பாகிஸ்தான், தென் ஆபிரிக்காவுக்கு எதிரான தொடர்களில் அடைந்த தோல்வி காரணமாக, இங்கிலாந்து அணி இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டது.

இந்நிலையில் டெஸ்ட் தொடரை இந்திய வீரர்கள் பழி வாங்கும் படலமாகவே பார்க்கின்றனர். இதற்கு அணி தயாராக உள்ளதா என்றால், அது சந்தேகம் தான். ஏனெனில், சீனியர்கள் டிராவிட், லட்சுமண் ஓய்வுக்குப் பின், இந்திய அணியின் பேட்டிங் பலம், பெரிய அணிகளுக்கு எதிராக சோதிக்கப்படவில்லை.

மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின். சமீபத்திய போட்டிகளில் அதிகமாக போல்டாகி விமர்சனத்தை சந்தித்தார். இருப்பினும், ரஞ்சி கோப்பை போட்டியில் சதம் அடித்து பார்மை மீட்ட நம்பிக்கையுடன் உள்ளார்.

டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்று ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பின் மீண்டும் களமிறங்குகிறார் யுவராஜ் சிங். கேன்சரில் இருந்து மீண்ட இவருக்கு, துலீப் டிராபியில் அடித்த இரட்டை சதம், டெஸ்ட் அணியில் இடம் கிடைக்க காரணமானது. ரெய்னாவின் இடத்தை பறித்துள்ள இவர், திறமையை நிரூபிக்க வேண்டும்.

சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங், ஒரு ஆண்டு இடைவெளிக்குப் பின் அணியில் சேர்க்கப்பட்டிருந்தாலும், அ்வின், பிரக்யான் ஓஜா அடங்கிய இருவர் கூட்டணிக்குத்தான் இடம் கிடைக்கும் எனத் தெரிகிறது. வெஸ்ட் இண்டீஸ், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்திய இவர்கள், மீண்டும் சுழல் ஜாலம் காட்டலாம்.

இந்திய மண்ணில் இங்கிலாந்து அணி எப்போதும் சுழற்பந்து வீச்சுக்கு திணறும். இம்முறை, சீனியர் ஸ்டிராஸ் இல்லாத நிலையில், இங்கிலாந்து அணிக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்று நம்பப்பட்டது. ஆனால், பயிற்சி ஆட்டங்களில் கேப்டன் அலெஸ்டர் குக், பேர்ஸ்டோவ், டிராட், பீட்டர்சன் மற்றும் சமித் படேல் ஆகியோர் சதம் அடித்து சூப்பர் பார்மில் உள்ளனர். அறிமுக வீரர் காம்ப்டன், பிரையர், மார்கன் ஆகியோரும் அரைசதம் அடித்து பேட்டிங் பலத்தை நிரூபித்தனர். ஸ்டீவன் மிஸ்:பவுலிங்கை பொறுத்தவரையில் 6 அடி 7 அங்குல உயரம் கொண்ட வேகப்பந்து வீச்சாளர் ஸ்டீவன், முதல் டெஸ்டில் இல்லாதது பலவீனம் தான். அதேநேரம் ஆண்டர்சன், பிரஸ்னன், ஸ்டுவர்ட் பிராட் மற்றும் ஆனியன்ஸ் இணைந்து விக்கெட் வேட்டை நடத்த காத்திருக்கின்றனர்.சுழலில் அனுபவ வீரர் சுவான், இந்திய வீரர்களுக்கு தொல்லை தரலாம்.

இங்கிலாந்து அணி கேப்டன் அலெஸ்டர் குக் கூறியது: அணியின் நட்சத்திர வீரர் பீட்டர்சன் எங்களது பலம். எந்நிலையிலும் போட்டியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும், இம்முறை வெற்றிக்கு கைகொடுப்பார்.

இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்த இந்திய வீரர்கள் வரிசையில் முன்னாள் கேப்டன் சுனில் கவாஸ்கர் முன்னிலை வகிக்கிறார். இவர், 38 டெஸ்டில் 4 சதம், 16 அரைசதம் உட்பட 2483 ரன்கள் எடுத்துள்ளார். இவரை அடுத்து மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் உள்ளார். இவர், 28 டெஸ்டில் 7 சதம், 12 அரைசதம் உட்பட 2423 ரன்கள் எடுத்துள்ளார். இம்முறை கூடுதலாக 61 ரன்கள் எடுக்கும் பட்சத்தில், இப்பட்டியலில் முதலிடம் பிடிக்கலாம். இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் எடுத்த இங்கிலாந்து வீரர்கள் வரிசையில் முன்னாள் கேப்டன் கிரகாம் கூச் முதலிடம் வகிக்கிறார். இவர், 19 டெஸ்டில் 5 சதம், 8 அரைசதம் உட்பட 1725 ரன்கள் எடுத்துள்ளார். இவரை அடுத்து கோவர் (24 டெஸ்ட், 1391 ரன்கள்) உள்ளார். தற்போதுள்ள இங்கிலாந்து வீரர்களில் கெவின் பீட்டர்சன் (12 டெஸ்ட், 1243 ரன்கள்) உள்ளார். தற்போதுள்ள இந்திய பவுலர்களில் ஹர்பஜன் சிங் (13 டெஸ்ட், 43 விக்.,) உள்ளார்.இந்தியாவுக்கு எதிராக அதிக டெஸ்ட் விக்கெட் கைப்பற்றிய இங்கிலாந்து பவுலர்கள் வரிசையில் வில்லிஸ் முன்னிலையில் உள்ளார். இவர், 17 டெஸ்டில் 62 விக்கெட் வீழ்த்தினார். தற்போதுள்ள இங்கிலாந்து பவுலர்களில் ஜேம்ஸ் ஆண்டர்சன் (10 டெஸ்ட், 45 விக்.,) உள்ளார். அதிகபட்சமாக இந்தியாவின் டிராவிட், சச்சின் தலா 7 சதம் அடித்தனர். முன்னாள் கேப்டன் முகமது அசார் 6 சதம் அடித்தார். இங்கிலாந்து சார்பில் இயான் போத்தம், கெவின் பீட்டர்சன், கிரகாம் கூச் ஆகியோர் தலா 5 சதம் அடித்தனர்.

அணி விவரம்:இந்தியா தோனி (கேப்டன்), காம்பிர், சேவக், சச்சின், விராத் கோஹ்லி, புஜாரா, யுவராஜ் சிங், அ்வின், பிரக்யான் ஓஜா, ஹர்பஜன் சிங், ஜாகிர் கான், உமே' யாதவ், இ'ாந்த் சர்மா, ரகானே, முரளி விஜய், டிண்டா.

இங்கிலாந்து: அலெஸ்டர் குக் (கேப்டன்), ஜேம்ஸ் ஆண்டர்சன், இயான் பெல், டிம் பிரஸ்னன், நிக் காம்ப்டன், ஸ்டீவன் பின், சமித் படேல், கெவின் பீட்டர்சன், மாட் பிரையர், கிரீம் சுவான், ஜோனாதன் டிராட், ஸ்டுவர்ட் பிராட், ஜோ ரூட், ஜானி பேர்ஸ்டோவ், கிரகாம் ஆனியன்ஸ், இயான் மார்கன், மான்டி பனேசர், ஸ்டுவர்ட் மீக்கர்●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank®
You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**Esan Kulasegaram**
Dir: **416.835.1700**
info@esanhomes.com,
www.esanhomes.com

ஈசன் குலசேகரம்
Sales Representative

# We can sell your home for top dollars ($$$)

## சொந்தமான ஒரு வீடு உங்கள் வாழ்கையின் மிகபெரியதொரு முதலீடு

- Compartive market evalution
- Full staging tips
- Innovative marketing strategies
- Unrivaled customer service
- Tireless work ethics



**Viki Velauthan**
Dir: **416-457-7162**
vvelauthan@yahoo.com

விக்கி வேலாயுதன்
Sales Representative

## Your Neighbourhood Realtors

- Listing on MLS
- Social media marketing
- Newspaper advertisment until 'SOLD'
- Open House
- Flyers delivered around property area
- you will be glad that you called us first
- Your peace mind is our goal referral incentives available, flexible commission

RE/MAX®

**Vision Realty Inc.,** Brokerage*
Office: **416.321.2228**
Fax: 416.321.0002
2210 Markham Road, Unit 01
Toronto, ON M1B 5V6
*Independently owned and operated

**Buy, Sell Or Rent....**

**Home, Business or Commercial Property**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட

வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

35 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**




எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

71

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை நுகர்வுக் கலாசாரத்தில் மார்கழி மாத்தின் முக்கியத்துவம் பற்றிய பார்வையாக அமைகின்றது.

இந்த மாதம் 25ம் திகதி யேசு பிறந்த தினமாகையால் நத்தார் (Christmas) பண்டிகை கனடாவின் அந்த மதம் சார்ந்தவர்களுக்கு ஒரு புனிதமான விடுமுறையாகவும், மற்ற எல்லோரும் இது ஒரு Seasonal Holiday என்கின்ற பெயரில் கொண்டாடும் ஒரு பொதுவான தினமாக மாறியுள்ளது. மகிழ்ச்சியாக பரிசுப்பொருட்களை பரிமாறிக் கொள்வதும் உறவினர்கள் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுப்பதும் இது தவிர சமூக அமைப்புகள், தொண்டர் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் என்பன விருந்து மண்டபங்களை ஒழுங்கு செய்து களியாட்டங்கள், கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய விருந்துகள் நடைபெறுவதும் எல்லோரும் தெரிந்த விடயம். இப்படியான செயல்பாடுகள் இம்மாத ஆரம்பத்திலிருந்தே ஆரம்பித்துவிடும்.

இது மாத்திரமன்றி, குழந்தைகளுக்கு வடதுருவத்தில் இருந்து கிறிஸ்மஸ் தாத்தா அவர்களுக்குரிய பரிசுப்பொருட்களை அவர்களின் வீட்டு கிறிஸ்மஸ் மரத்தின் அடியில் வைப்பதாக சொல்லப்பட்டு பரிசுப்பொருட்களை பெற்றோர்கள் வாங்குவதும் தவிர்க்க முடியாத ஒரு மரபு சார்ந்த விடயமாகும். இவற்றினை நாம் பொருளாதார ரீதியில் பார்க்கும் போது பெரும்பாலான கனடிய மக்களின் செலவுகள் வரவுக்கு மீறியதாகவோ அல்லது அவர்கள் திட்டமிட்ட செலவுகளை மீறிய மாதமாகவோ இந்த மார்கழி மாதம் இருக்கின்றது. பலரின் கடன் அட்டைகள் முழுமையான கடன்தொகையும் பாவிக்கப்படும் நிலைக்கு வருவதும் உண்டு.

நத்தார் பண்டிகைக்கு மறுநாளான மார்கழி மாதம் 26ம் திகதி Boxing Day நுகர்வுக் கலாசாரத்தில் இன்னும் ஒரு முக்கிய நாளாகும். பெரும்பாலான விற்பனை நிறுவனங்கள் தமது வருடக் கையிருப்புக்களை விற்று முடிக்கும் நாளாகவோ அல்லது வாரமாகவோ இது அமைகின்றது.

பல நுகர்வோர்கள் இப்படியாக மலிவு விலையில் கவரப்பட்டு தற்சமயம் அவர்களுக்கு அவசியமில்லாத பொருட்களை வாங்கும் ஒரு மனநிலைக்கு உந்தப்படுகின்றார்கள். இதில் முக்கியத்துவம் வகிப்பது இலத்திரனியல் சம்பந்தமான பொருட்கள். உதாரணமாக, கைத்தொலைபேசி, கணினி, கணினிக்குரிய மென்பொருட்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள், புகைப்படக்கருவி, தொலைக்காட்சி, வானொலி, குறிப்பிட்ட வீட்டுத் தளபாடங்கள், சமையலுக்கான உபகரணங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த குறிப்பிட்ட காலத்தில் குறைந்த ஒரு பொருளையாவது வாங்குவது ஒரு சாதனையான விடயமாக கருதுபவர்களும் உண்டு. ஆனால் சிலர் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு தேவைப்படும் பொருட்களை வாங்காமல் காத்திருந்து இக்காலத்தில் வாங்கும் புத்திசாலித்தனமான (smart consumer) நுகர்வோரும் உண்டு.

இன்றைய இந்த Boxing Day விற்பனையாளர்களுக்கும் நுகர்வோருக்கும் இடையிலான பொருட்களுக்கான விலை பேரம்பேசி விற்றலும் வாங்குவதும் நடைபெறும் நாளாக மாற்றப்பட்டிருக்கின்றது. ஆரம்ப காலத்தில் பிரித்தானிய ஐரோப்பிய நாடுகளில் கைத்தொழில் புரட்சி ஏற்படுவதற்கு முன்பு மன்னன், பிரபுகள், சாதாரண குடிமக்கள் என்கின்ற சமூக கட்டமைப்பு இருந்த காலத்தில் செல்வந்தர்கள் அல்லது நிலச்சுவாந்தர்கள் (நிலத்துக்கு உரிமை உடையவர்கள்) வீட்டில், அல்லது விவசாயத் தொழிலாளர்களுக்கு கிறிஸ்மஸ் தினம் முடிந்த அடுத்த நாள் விடுமுறை கொடுத்து வீட்டில் எஞ்சியிருக்கும் உணவுப் பண்டங்களை ஒரு பெட்டியில் (Box) போட்டுக் கொடுப்பதுடன் வேறு சில பெறுமதியான பரிசுப்பொருட்களையும் கொடுத்து அனுப்பும் மரபு முறையில் தோன்றிய Boxing Day காலப்போக்கில் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களால் இன்று இது நுகர்வுக் கலாசாரத்துக்குள் வேறு ஒரு பரிமாணத்தினை எடுத்துள்ளது.

கடன்பட்டு வாழ்தல் சமூகத்தில் ஒரு கௌரவக்குறைவு என்கின்ற கருதுகோள் உடைய சமூகத்தில் இருந்து இன்று புலம்பெயர்ந்து வந்து நாம் கடன்பட்டாயினும் மற்றவர்களைப் போல் ஆடம்பர வாழ்வில் ஈடுபடுதல் ஒரு தவறான விடயம் அல்ல என்கின்ற எண்ணக் கருவினை நுகர்வுக் கலாசாரம் எம்மீது திணித்திருக்கின்றதா? இது சரியானதா? அல்லது தவறானதா? என்கின்ற கேள்வியினை எமக்கு நாமே கேட்டுக்கொண்டு இந்தக் குளிர்கால விடுமுறையை மகிழ்வாகக் கழிப்போம்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்
**S.P. Importers**



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
416 261 4737

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
416 266 3077

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
416 261 3881

## முகத்தில் சிரிப்பு...

சிரிப்பு என்பது மனிதனோடு கூடப்பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடு என்கிறார்கள் பலர். 'மனிதனின் முதற் சிரிப்பானது ஆபத்திலிருந்து தப்பி வந்தவன் தன் மன ஆறுதலை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதில் ஆரம்பித்திருக்கலாம் என்கிறார் தத்துவஞானியான John Morreall சிரிக்கும்போது பிறக்கின்ற உளஅமைதியானது உயிரினங்களில் இயல்பாக உள்ளுறைந்திருக்கும் சண்டையிடும் உணர்வைத் தளர வைக்கிறது.

இக் கருத்தின் நீட்சியாகவே சிரிப்பு என்பது மனித அல்லது உயிரினங்களிடையே உறவுகளை ஏற்படுத்துவதையும், வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது என்கிறார்கள் இன்றைய ஆய்வாளர்கள். இதைத்தான் 'சிரிப்பென்பது இருவர்களுக்கு இடையேயான மிகக் குறைந்த இடைவெளி' என Victor Borge சொன்னார் போலும்.

மனித இனத்திற்கே சொந்தமானதா சிரிப்பு அது சரி. '..மனித இனத்திற்கே சொந்தமானது சிரிப்பு..' என்றும் பாடினாரல்லவா கலைவாணர்.
அது உண்மைதானா? சில மிருகங்கள் சிரிப்பதுண்டு என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். எலிகள், குரங்குகள் மற்றும் நாய்கள் எழுப்புகின்ற சில ஒலிகள் அவை சிரிப்பதை எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக எலிகள் ஒன்றோடு ஒன்று விளையாடும்போது உணர்ச்சிப் பெருக்கில் உச்ச ஸ்தாயில் கீச்செனெச் சத்தமிடுவது சிரிப்பதின் அறிகுறிதான். குரங்குகளும் அவ்வாறே விளையாடும்போது சத்தமிடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

நாய்களின் சிரிப்பை நீங்களே அவதானித்திருக்கக் கூடும். உங்களோடு விளையாடும் போது அல்லது தன் எஜமானைக் கண்ட மகிழ்ச்சியில் இருக்கும்போது அது வாலைக் ஆட்டிக்கொண்டு ஒலி எழுப்புகிறது அல்லவா? அதுதான் அதனுடைய சிரிப்பு எனலாம் அல்லவா? இருந்தபோதும் மிருகங்கள் மனிதனைப்போல போலியாகச் சிரிப்பது அறியப்படவில்லை.

மருந்தாகும் சிரிப்பு
Laughter is the best medicine என ஆங்கிலத்தில் சொல்வார்களே. அது உண்மையா?
சிரிப்பதானது மனதையும், உடலையும் வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும் என்பதை பல மருத்துவ ஆய்வுகள் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளன. ஆனால் அதைப் பற்றி இங்கு பேச அவகாசமில்லை.

இருந்தபோதும்... ".சிரி.. சிரி.. சிரிசிரியெனச் சிரி...." என ஆளவந்தானில் கமல் பாடுகிறாரே.
அதுபோல 'கலகலவெனச் சிரி கண்ணில் நீர் வரச் சிரி...' சிரித்திருப்போம்.
மகிழ்ந்திருப்போம். நலமடைவோம். ●

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை
**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கப்பூரில் உலகின் முதல் LCD Credit CardI

அறிமுகப்படுத்தும் MasterCard திருடப்படும் க்ரெடிட் கார்டுகளால் ஏற்படும் இழப்புகள் ஏராளம். இதைத் தடுக்க MasterCard நிறுவனம் LCD திரை கொண்ட புது வகையான அட்டைகளை நேற்று முன் தினம் சிங்கப்பூர் வாடிக்கையாளர்கள் பயன்படுத்த அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் ஒரு முறை செயல்படும் கடவுச் சொல்லை (OTP) உருவாக்க இது பெரிதும் பயன்படும். இது மட்டுமல்லாது உங்களின் Credit Score, Loyalty Points போன்ற விவரங்களையும் எளிதாகக் காணலாம். மிகவும் முக்கியமான பணப் பரிவர்த்தனைகளுக்கு என OTP உருவாக்க ஒரு சிறிய கணிப்பான் (Calculator) போன்ற பொருளை தூக்கிச் செல்ல வேண்டும். இந்த செயல்திறனை அட்டையில் உட்புகுத்தியுள்ளது MasterCard நிறுவனம். இந்த வசதி உலகிலேயே முதன் முதலில் Standard Chartered வங்கி வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும். பின்னர் MasterCard Platinum & Bonus$aver credit cards மற்றும் MasterCard Super Salary, XtraSaver, Bonus$aver debit cards issued in Singapore will now be Display cards.●

## Galaxy Note II இரு சிம்கார்டு வசதியுடன்

கைப்பேசி உற்பத்தியில் புரட்சி செய்து வரும் Samsung நிறுவனமானது தற்போது Dual Sim வசதியுடன் கூடிய Galaxy Note II கைப்பேசிகளை அறிமுகப்படுத்த தயாராகின்றது. நவம்பர் 24ம் திகதி முதன் முறையாக சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் இக்கைப்பேசிகளில் Dual Sim வசதி புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதோடு அவற்றில் ஒன்று GSM வலையமைப்பினைக் கொண்டதாகவும், மற்றையது CDMA வலையமைப்பைக் கொண்டதாகவும் பயன்படுத்தக்கூடியதாகக் காணப்படுதல் விசேட அம்சமாகும். இவை தவிர 1280 x 720 Pixels Resolution உடையதும், 5.5 அங்குல அளவுடைய -துமான Super AMOLED Multi-Touch தொழில்நுட்பத்தில் அமைந்த தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன் 1.6GHz வேகத்தில் செயலாற்றவல்ல Processor – இனையும் கொண்டுள்ளது. மேலும் 8 Mexapixels உடைய பிரதான கமெரா மற்றும் 1.9 Mexapixels கொண்ட துணைக் கமெரா ஆகியவற்றையும் கொண்டுள்ளது. இவை 16GB, 32GB மற்றும் 64GB கொள்ளளவுடைய சேமிப்புக் கொள்ளளவுடைய பதிப்புக்களாக வெளியிடப்படவுள்ளன.●

## சமூக வலைத்தளமான ட்விட்டர் நமது தமிழில்

சமூக வலைத்தளமான ட்விட்டர் தனது பக்கத்தினை தமிழில் வடிவமைத்து வழங்க இருக்கிறது. ட்விட்டர் பக்கத்தில் ஹோம், கனக்டு, ஃபாலோவர் என்ற அனைத்து வார்த்தைகளையும் ஆங்கிலத்தில் பார்த்து வருகிறோம். இனி தமிழ் மொழியிலேயே ட்விட்டர் பக்கத்தினை பார்க்கலாம். ஐரிஷ், தமிழ், கன்னடா, பெங்காலி என்று தொடங்கி இப்படி மொத்தம் 16 மொழிகளில் மொழிபெயர்ப்பு மையத்தினை (ட்ரான்ஸிலேஷன் சென்டரை) வழங்க உள்ளது ட்விட்டர்.

உதாரணத்திற்கு கூகுள் பக்கத்தில் தமிழ் என்ற ஆப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும். இதனால் தமிழ் என்ற ஆப்ஷனை க்ளிக் செய்தால் அந்த பக்கம் முழுவதும் தமிழ் மொழியில் மாற்றப்பட்டிருப்பதை பார்க்கலாம். இப்படி ட்விட்டரும் தனது பக்கத்தினை 16 மொழிகளில் வடிவமைக்க இருக்கிறது. இதில் புதுமையான விஷயமும் ஒன்றும் இருக்கிறது. இப்படி தமிழ் மொழியில் ட்விட்டர் பக்கத்தினை வடிவமைக்கும் வாய்ப்பினை ட்விட்டர் உறுப்பினர்களுக்கே வழங்குகிறது.●

madd madd madd madd madd

டிலனும் ஜோசுவாவும் எப்போதும் ஒரு முக்கிய துண்டை காணாமல் தவிப்பார்கள்...அவர்களின் அப்பா.



டேரல் ரே ஒரு குடிபோதை சாரதியால் கொல்லப்பட்டார்.

சிவப்புப் பட்டி திட்டத்திற்கு ஆதரவளிப்போம்

madd Toronto

416-924-2666
info@maddtoronto.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AB LEGAL SERVICES
## Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200    Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**
628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

SABESAN'S Choice



தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு
சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்
யன்னல், கதவு புதுப்பித்தல்
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**



3/4 INCH HARDWOOD SUPPLIED AND INSTALLED $4.99

*Sabesan's Choice*

**416 605 1990**

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

**JRB Universal Inc.**
Almost All Services Available

647 289 6164



**R.R. Rajkumar**
B.Com (Hons), M.B.A.

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபஞ்சத்தின் தொலைவிலிருக்கும் பால்வெளி மண்டலம் கண்டுபிடிப்பு

பிரபஞ்சத்தில் மிகத் தொலைவில் உள்ள பால்வெளி மண்டலத்தை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். அதற்கு 'MACSO647-JD' என்று பெயரிட்டுள்ளனர். எமது சூரியக் குடும்பம் (சூரியன் மற்றும் அதைச் சுற்றி வரும் கோள்கள்) அமைந்துள்ள பால்வெளி மண்டபத்தில் எண்ணற்ற நட்சத்திரங்கள் இருக்கின்றன. பால்வெளி மண்டலத்தின் மையப் பகுதியிலிருந்து 26,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் சூரியன் அமைந்துள்ளது.

இதைப் போன்று பிரபஞ்சத்தில் சிறியதும், பெரியதுமாக எண்ணற்ற பால்வெளி மண்டலங்கள் காணப்படுகின்றன. அதை வான்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சக்திவாய்ந்த தொலைநோக்கிகள் மூலம் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவின் "ஹப்பிள்" மற்றும் "ஸ்பிட்ஸர்" தொலைநோக்கிகள் மற்றும் அறிவியல் இதழான "நேச்சர்" அமைந்துள்ள தொலைநோக்கியை ஒருங்கிணைத்து மேற்கொண்ட ஆய்வில் புதிய பால்வெளி மண்டலத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

(பெருவெடிப்புக்குப் பின்) பிரபஞ்சம் தோன்றி42 கோடி ஆண்டுகளுக்குப் பின் இந்தப் புதிய பால்வெளி மண்டலம் உருவாகியிருக்கலாம் எனத் தெரிகிறது. பூமியில் இருந்து 1330 கோடி ஒளி ஆண்டுகள். தொலைவில் இந்தப் புதிய பால்வெளி மண்டலம் அமைந்துள்ளது. இதற்கு 'MACSO647-JD' என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளனர்.

'MACSO647-JD' மண்டலம் மிகவும் சிறியதாக இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். அதன் அகலம் 600 ஒளி ஆண்டுகள் தொலைவுக்கும் குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. எமது சூரியன், பூமி உள்ளிட்ட கோள்கள் அமைந்துள்ள பால்வெளி மண்டலம் 1, 20, 000 ஒளி ஆண்டுகள் தொலைவு அகலமானது.●

# பீட்ரூட்டின் மருத்துவப் பயன்கள்

நாம் சாதாரணமாக உண்ணும் பீட்ரூட்டில் நிறைய மருத்துவ பயன்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அழகிய நிறமும் நிறைய சத்துக்களும் கொண்ட காய் பீட்ரூட் இதனுடைய நிறத்திற்காகவே இதனை அனைவரும் விரும்பி உண்ணுகின்றனர். பீட்ரூட்டில் உள்ள கார்போஹைட்ரேட்ஸ் சர்க்கரை துகள்களாக இருப்பதால் இது விரைவில் ஜீரணமாகி நம் ரத்தத்துடன் கலந்து விடுகிறது.

ஒரு 100 கிராம் பீட்ரூட்டில் தண்ணீர் 87.7 விழுக்காடும், புரோட்டின் 17 விழுக்காடும், கொழுப்பு 0.1 விழுக்காடும், தாதுக்கள் 0.8 விழுக்காடும், நார்ச்சத்து 0.9 விழுக்காடும், கார்போஹைட்ரேட் 8.8 விழுக்காடும் உள்ளது. மற்றும் கால்சியம் 18 மில்லி கிராமும், பாஸ்பரஸ் 5.5 மில்லிகிராமும், இரும்பு 10 மில்லிகிராமும், வைட்டசின் சி 10 மில்லிகிராமும் மற்றும் வைட்டமின் ஏ மற்றும் பி1, பி2, பி6 நியாசின் வைட்டமின் பி ஆகியவற்றுடன் சோடியம், பொட்டாசியம், சல்வர், க்ளோரின், ஐயோடின், காப்பர் போன்ற சத்துக்களும் பீட்ரூட்டில் உள்ளன.

• பீட்ரூட்டை பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் குணமாகும். • பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும் பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும். • பீட்ரூட்டை நறுக்கி பச்சையாக எலுமிச்சை சாற்றில் தோய்த்து உண்டுவர இரத்தத்தில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும். • கல்லீரல் கோளாறுகளுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த டானிக். பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கு பீட்ரூட் ஒரு சிறந்த டானிக். • பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் சரியாகும். • பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும். • புதியதாக இரத்த அணுக்கள் உருவாக துணை புரிகிறது. பச்சைக் காய்கறிகள், கீரைகள், பழங்கள், பேரீச்சம் பழம், அத்திப்பழம் ஆகியவற்றை அதிக அளவு உண்டும், இரத்தத்தின் அளவு அதிகரிக்காமல் இருக்கும் பட்சத்தில் பீட்ரூட்டை வாரத்திற்கு நான்கு நாட்கள் உண்டால் நல்ல பலன் கிடைக்கும். சமையல் செய்து சாப்பிடுவதுடன் பச்சையாகவும் சாப்பிடலாம். • தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சீயக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் சரியாகும். • புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், ஊட்டி பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.●

HERITAGE Education Funds
**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576




S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org